

ராஜகுமாரிகள்

ராஜி

காசி தேசத்து அரசனுக்கு மூன்று குமாரிகள் இருந்தார்கள். அவர்கள் மிகவும் அழகு வாய்ந்தவர்கள். மூத்த அரச குமாரியின் பெயர் பத்மினி. இரண்டாவது அரசகுமாரியின் பெயர் சாந்தா. மூன்றாவது அரச குமாரியின் பெயர் நிர்மலா. நந்தவனத்தில் ஒரு நாள் மாலை மூன்று அரச குமாரிகளும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

"நாம் ஒருவிதக் கவலையும் இல்லாமல் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறோம், பார்த்தீர்களா?" என்றாள் நிர்மலா. "அரச குமாரியாக இருப்பது எனக்குப் பிடிக்கவே இல்லை. உல்லாசமாக ஒரு கவலையுமின்றிப் பட்சிகள் ஆகாயத்தில் பறக்கின்றனவல்லவா? நம்மைவிடப் பட்சிகள் தான் ஆனந்தமாயிருக்கின்றன" என்று சொன்னாள் பத்மினி. "நீ சொல்வது தான் சரி" என்றாள் சாந்தா. இவர்கள் இருவரும் சொல்லியதைக் கேட்ட நிர்மலா சிரித்துவிட்டுப் பேசாமலிருந்தாள். பத்மினிக்கும், சாந்தாவுக்கும் எப்பொழுதும் எவ்வளவு சந்தோஷமாக இருந்தாலும், திருப்தியில்லாமல் முகத்தைச் சுளித்துக் கொண்டே இருப்பது வழக்கம்.

மூன்று அரச குமாரிகளும் நந்தவனத்தில் பேசிக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு அழகான பெண் பறந்து வந்து அவர்கள் எதிரில் நின்றாள். "அரச குமாரிகளே! நான்தான் வனதேவதை. நீங்கள் பேசிக்கொண்டிருந்த சமாசாரங்கள் என் காதில் விழவே, நான் உங்கள் எதிரில் வந்தேன். உங்கள் விருப்பப்படி உங்களுக்கு எந்த உருவமாக மாற வேண்டுமோ, அதுமாதிரியாக நான் மாற்றி விடுகிறேன். ஆனால், நீங்கள் நியாயப்படி அரச குமாரிகளாக இருப்பதுதான் நல்லது. உங்களுக்கு வேறு உருவமாக மாற வேண்டுமென்றால் நான் மாற்றி விடுகிறேன். ஐந்து நிமிஷங்கள் உங்களுக்கு அவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் நீங்கள் யோசனை செய்து சொல்லுங்கள்" என்று வனதேவதை சொல்ல, அரச குமாரிகளும் யோசனை செய்தார்கள்.

அப்பொழுது, பத்மினி குதித்துக் கொண்டே "மரத்தின்மீது குதூகலத்துடன் உட்கார்ந்திருக்கும் பஞ்சவர்ணக் கிளியாக என்னை மாற்றி விடுங்கள்!" என்று சொல்ல, மறு நிமிஷம் அவள் கீச் கீச் என்று கத்திக்கொண்டு பஞ்சவர்ணக் கிளியாக மாறிப் பறக்க ஆரம்பித்தாள். "என்னைப் பலவித வர்ணத்துடன் விதவிதமான புஷ்பங்களில் உட்கார்ந்து தேனைப் பருகும் வண்ணாத்திப் பூச்சியாக மாற்றி விடுங்கள்" என்று சாந்தா வேண்ட, மறு நிமிஷம் சாந்தா வண்ணாத்திப் பூச்சியாக மாறினாள். உடனே மூன்றாவது ராஜகுமாரி நிர்மலா, "வனதேவதையே! என் உருவத்தை மாற்றிக் கொள்ள நான் விரும்பவில்லை. நான் உங்களை எப்பொழுது நினைக்கிறேனோ அப்பொழுது நீங்கள் வந்து எனக்கு உதவி செய்யவேண்டும்" என்று சொல்ல வனதேவதை நந்தவனத்தை விட்டு அகன்றாள்.

பஞ்ச வர்ணக் கிளியாக மாறின பத்மினி தன் உடலை ஒரு முறை பார்த்துச் சந்தோஷித்தாள். மரத்துக்கு மரம் பறந்து உல்லாசமாகக் காலங் கழிக்கப்போவதை நினைத்துச் சந்தோஷத்தினால் சிறகை ஒருமுறை அடித்துக் கொண்டாள். அதேசமயம் வண்ணாத்

திப் பூச்சியாக மாறின சாந்தா தன்னுடைய சிறகிலுள்ள வர்ணங்களைப் பார்த்துச் சந்தோஷங் கொண்டாள்; நல்ல நிறமும் மணமும் உள்ள புஷ்பங்களைத் தான் முகர்ந்து பார்க்கப் போவதையும் அதிலுள்ள தேனைப் பருகப் போவதையும் நினைத்து அவள் ஆனந்தம் அடைந்தாள்.

வண்ணாத்திப் பூச்சியாக மாறின தன் சகோதரியிடம் பேசப் பஞ்சவர்ணக் கிளி ஆசை கொண்டது. அதனால் கீச் கீச் என்று சத்தம் இட முடிந்ததே தவிர வேறு ஒன்றும் பேச முடியவில்லை. வண்ணாத்திப் பூச்சியும் பேசப் பார்த்தது. அதனாலும் முடியாமல் போகவே பஞ்சவர்ணக் கிளியும் வண்ணாத்திப் பூச்சியும் ஏமாந்து அவ்விடத்தை விட்டு வெவ்வேறு வழியாகப் பறந்து சென்றன.

பஞ்சவர்ணக் கிளி அரண்மனைக்கு அருகில் உயரப் பறந்தது. அரண்மனை நந்தவனத்தில் நின்று கொண்டிருந்த நிர்மலாவின் கையில் பிடிபடாமல் அது அவளைச் சுற்றிச் சுற்றி வந்தது. அப்பொழுது கிளியின் கண்கள் அரண்மனை நந்த வனத்திற்குப் பக்கத்திலுள்ள தோட்டத்தின் பக்கம் சென்றன. அங்கு கீழே விழுந்திருந்த சில மாம்பழங்களைத் தின்பதற்காகப் பூமியில் உட்கார்ந்தது. உட்கார்ந்ததுதான் தாமதம், அதன் கால்கள் விரிக்கப்பட்டிருந்த வலையில் மாட்டிக் கொண்டன. தன் உயிருக்கு ஆபத்து வந்து விட்டது என்றறிந்த பஞ்ச வர்ணக் கிளி கீச் கீச் என்று கத்திற்று. அந்த சப்தத்தைக் கேட்ட நிர்மலா தன் சகோதரிக்கு ஆபத்து வந்து விட்டது என்று அறிந்து ஓடோடியும் சென்று தன் சகோதரியை வலையினின்று எடுத்து அரண்மனைக்குக் கொண்டு வந்து ஒரு கூண்டில் வைத்துப் பூட்டி விட்டாள்.



வண்ணாத்திப் பூச்சியாக மாறின சாந்தாவைக் கண்டு பிடிப்பதற்காக நந்தவனமெல்லாம் தேடினாள் நிர்மலா. அப்பொழுது அரண்மனையிலுள்ள குழந்தைகள் எதையோ துரத்திக் கொண்டு ஓடுவது போல் தெரியவே, நிர்மலா அருகில் சென்று கவனித்தாள். அப்பொழுதுதான் அச் சிறுவர்கள் தன் சகோதரி வண்ணாத்திப் பூச்சியைப் பிடிக்க முயல்வதும், அது அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டு திண்டாடுவதும் தெரிய வந்தது. "அதை விட்டு விடுங்கள்! விட்டு விடுங்கள்!" என்று அந்தச் சிறுவர்களைப் பார்த்துக் கத்தினாள் நிர்மலா.


ஆனால் பையன்களா கேட்பவர்கள்? "மாட்டோம்" என்றார்கள் ஓடிக் கொண்டே. ஒரு சிறுவன் கையில் அகப்பட்டுக் கொண்டிருந்த வண்ணாத்திப் பூச்சியைப் பிடுங்குவதற்காக மற்றவர்கள் முயற்சி செய்ததும், "ஐயோ! சாந்தாவுக்கு ஆபத்து வந்து விட்டதே!" என்று கதறினாள் நிர்மலா. சட்டென்று அவளுக்கு வன தேவதையின் ஞாபகம் வந்தது. "தாயே! நீதான் சாந்தாவைக் காப்பாற்றணும்" என்று அவள் வேண்டினாள்.

அடுத்த நிமிஷம் வனதேவதை நிர்மலாவின் எதிரில் நின்றாள். நிர்மலா தன் சகோதரிகளின் செய்கைகளை மன்னிக்கும்படி வேண்டி அவர்களுக்குச் சுய ரூபத்தைக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டாள். உடனே கூண்டிலிருந்து கொண்டு வரப்பட்ட பஞ்சவர்ணக் கிளி பத்மினியாகவும், வண்ணாத்திப் பூச்சி சாந்தாவாகவும் மாறின. அதைக் கண்ட நிர்மலாவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அவள் வன தேவதையை வாயார வாழ்த்தினாள். பத்மினியும், சாந்தாவும் வெட்கத்தினால் தலை குனிந்தார்கள். மூன்று அரசகுமாரிகளையும் ஆசீர்வதித்து வன தேவதை அவ்விடத்தை விட்டு அகன்றாள். அது முதல், ராஜ குமாரிகள் மூவரும் சந்தோஷமாக இருந்து வந்தார்கள்.

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

கல்கி



LKI ஏப்ரல் 9, 1944 4 அண

ஞாபக மிருக்கட்டும்!

கடைசி தேதி — ஏப்ரல் 30!

"கல்கி" சிறு கதைப் போட்டி

பரிசு ரூ. 1000

முதல் பரிசு ரூ. 500; ஐந்து பரிசுகள் ஒவ்வொன்று ரூ. 100

1. தமிழ் நாட்டில் அதிசயமான இலக்கிய மறு மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. "எழுத வேண்டும்" "எழுத வேண்டும்" என்று எத்தனையோ இளம் எழுத்தாளர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஊக்கமும் உற்சாகமும் நல்ல முறையில் பயன்படுமாறு "கல்கி" இந்தச் சிறு தொண்டைச் செய்ய முன்வந்திருக்கிறது

2. இந்தப் பரிசுத் திட்டத்துக்காக அனுப்பப்படும் கதைகள் தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்ட புதுக் கற்பனைகளாக இருக்க வேண்டும். மொழிபெயர்ப்புக்களும், தழுவி எழுதிய கதைகளும் இந்தப் பரிசுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டா.

3. கதையின் நீளம் "கல்கி"யில் ஐந்து பக்கம் முதல் பன்னிரண்டு பக்கத்துக்குள் அடங்குவதா யிருக்க வேண்டும்.

4. ஒரே ஆசிரியர் இரண்டு கதைகள் அனுப்பி வைக்கலாம். அதற்கு மேல் அனுப்பக்கூடாது.

5. 1944-ம் வருஷம் ஏப்ரல்மீ 30வுக்குள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும். கவரின் மேல் "சிறு கதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

6. பின் வரும் தமிழன்பர்கள் அடங்கிய பஞ்சாயத்தார் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களுடைய தீர்ப்பே முடிவானது.

1. ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார்.
2. ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்
3. கே. சந்திரசேகரன், பி. ஏ., பி. எல்.
4. க. நா. சுப்பிரமண்யம் ("சூறாவளி" ஆசிரியர்)
5. ஆசிரியர், "கல்கி"

7. எல்லாவற்றிலும் சிறந்ததென்று பஞ்சாயத்தார் கருதுகிற கதைக்கு முதல் பரிசு ரூ. 500 அளிக்கப்படும். அடுத்தபடியாக ஐந்து கதைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 வீதம் அளிக்கப்படும். பரிசு பெற்ற கதையின் 'காபிரைட்' உரிமை "கல்கி" காரியாலயத்தைச் சேர்ந்தது.

8. பரிசு பெறாத கதைகளில் பிரசுரத்துக்குத் தகுதியான கதைகள் பிரசுரத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். அவற்றுக்கு உசிதமான சன்மானம் வழங்கப்படும். பரிசு பெறாமல் பிரசுரத்துக்கு மட்டும் எடுத்துக் கொள்ளப்படும் கதைகளின் 'காபிரைட்' உரிமை கதை ஆசிரியர்களுடையது.

9. முதற் பரிசு பெற எந்தக் கதையும் தகுதியற்றதென்று பஞ்சாயத்தார் கருதினால், முதற் பரிசுத் தொகை பஞ்சாயத்தாரின் உசிதம்போல் பிரித்துக் கொடுக்கப்படலாம்.

10. இந்தப் போட்டி சம்பந்தமான விதிகளை மாற்றவும், திருத்தவும் "கல்கி" ஆசிரியருக்கு உரிமை உண்டு.

11. சந்தேகம் ஏற்படும் எந்த விஷயத்திலும் "கல்கி" ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

டி. சதாசிவம்

மானேஜர், "கல்கி"


Coffee
Ours for Quality
RAW, ROAST OR GROUND
GANESH & Co
MADRAS

தோன்றும். சுமார் அரை மணி நேரம் ஆகிவிட்டால் சாரீரத்தில் ஒருவித 'எதவு' ஏற்பட்டுப் பிரமாதமாகப் பாட ஆரம்பித்து விடுவார். அது முதல் கச்சேரி முடிகிற வரையில் எவ்வளவு நேரம் ஆனாலும் சாரீரத்தினுடைய காம்பீர்யமும் மிகவும், பிரமிக்கக்கூடிய பிருகாக்களும், பாடுகிற ராகத்திற்கு ஏற்பட்ட உயர்ந்த பாணியும், அடுக்கு அடுக்காக வரும் சங்கதிகளும் எப்பேர்ப்பட்டவர்களையும் தலை சுற்றும்படியாய்ச் செய்துவிடும். பல்லவி பாடுங்கால் ஸ்வரங்களை வரிசை வரிசையாக அடுக்கிக்கொண்டு போகிற அழகும் தாளப்பிடிப்பும் ரொம்ப மெச்சத் தகுந்ததாயிருக்கும். ஸ்ரீ தியாக ப்ரும்ம கீர்த்தனங்கள், பட்டணம் சுப்ரமணிய ஐயர் கிருதிகள் முதலியவற்றை இவர் ஏராளமாகப் பாடுவார். ஸ்ரீ தியாக ப்ரும்ம உத்ஸவத்திலும் திருவிசநல்லூர் ஐயாவாள் உத்சவத்திலும் வருஷா வருஷம் வந்து உயர்ந்த ஸெட்டுடன் பிரமிக்கத்தக்க கச்சேரிகள் செய்திருக்கிறார். இவர் சுருதியில் கார்வை கொடுத்துப் பாடுகிற பாணி நாளது பரியந்தம் ஒருவரிடத்திலும் ஏற்படவில்லை. சுமார் மூன்று அல்லது நான்கு நிமிஷத்துக்குக் குறையாமல் கார்வை கொடுத்து உடனே அதிலேயே ப்ருகாவை அவுட் வாணம் மாதிரி உதிர்த்து விட்டால் எப்பேர்ப்பட்டவர்கள் தான் ஈடுபடமாட்டார்கள்?

ஒரு சமயம் திருவிசநல்லூர் ஐயாவாள் உத்சவத்தில் ஸ்ரீ புஷ்பவனமய்யர் கச்சேரி முதல் நாளும் மறுநாள் வைத்தியநாதய்யர்வாள் கச்சேரியுமாக நேர்ந்தது. அதுவரையில் ஸ்ரீ புஷ்பவனமய்யர் பாட்டைக் கேட்காத வைத்தியநாதய்யர் அன்று ஸ்ரீ புஷ்பவனமய்யர் கச்சேரிக்கு வந்து சபையை அலங்கரித்தார். கபடு, சூது, அசூயை இல்லாமல் மற்றவர்கள் பாட்டைக் கேட்டுச் சந்தோஷப் படக்கூடிய வைத்யநாதய்யர், ஈசனால் உயர்ந்த சாரீரம் அளிக்கப்பட்டிருந்த புஷ்பவனமய்யரின் கச்சேரியைக் கேட்டு மெய்மறந்து, "பாடினால் இம்மாதிரி பாட வேண்டும்; இல்லாத பக்ஷத்தில் பாடக்கூடாது" என்றார். மறு தினம் ஸ்ரீ வைத்தியநாதய்யர் மாலை ஆறுமணிக்கெல்லாம் தம் கச்சேரியைத் தகுந்த ஸெட்டுடன் உபக்ரமம் செய்தார். ஸ்ரீ புஷ்பவனம் ஐயரும் கச்சேரிக்கு வந்து முன் அணியில் அமர்ந்தார். ஒரு மணி நேரம் சென்றதும் ஐயர்வாள் சாரீரத்தில் சூடு ஏற்பட்டு விசேஷ அமைப்புடன் விளங்கலாயிற்று. உடனே ஸ்ரீ ரஞ்சனி ராகத்தைக் கொஞ்சம் பாடிவிட்டு "ஸொகஸுகா மிருதங்க தாளமு" என்ற கீர்த்தனத்தை உபக்ரமம் செய்து "நிகமசிரோத்தமு" என்ற அநுபல்லவியில் கார்வை கொடுத்து விஸ்தரிக்க ஆரம்பித்துப் பிருக்காக்களைக் கற்பனையுடன் அள்ளிக் கொட்டினார். சுமார் ஒன்றரை மணி நேரத்திற்குக் குறைவில்லாமல் அந்த ஒரே இடத்தை உயர்ந்த பாணியுடனும், கற்பனையுடனும், ஸ்ரீ ரஞ்சனி ராகத்தில் இனிப் பாடுவதற்கு இடமே கிடையாது என்று சொல்லும்படியாய்ச் சகல வித ஸங்கதிகளுடனும் பாடி, ஸ்வரம் பாடினவுடன், ஸ்ரீ புஷ்பவனமய்யர் தம்மை மறந்து கண்ணில் ஆனந்த பாஷ்பத்துடன், "சமுத்திரத்தின் ஆழத்தைக் கண்டு பிடித்தாலும் பிடிக்கலாம், அண்ணாவின் சங்கீத ஞான ஆழத்தைக் கண்டு பிடிக்க முடியாது" என்று சொல்லி மெச்சினார்.

இவ்வளவு மகிமை வாய்ந்த இவர் கர்வம் சிறிதுமில்லாமல் பெரியோர்களிடத்தில் பயபக்தியுடன் நடந்துவந்தது குறிப்பிடத்தக்கதாகும். "உழைப்புக்குத் தகுந்த கூலி" என்பதை நிரூபித்த சிரேஷ்டர் என்று இவரைக் கூறலாம். நாதஸ்வர வாத்தியத்தில் மிக்க பிரசித்தி பெற்ற மன்னார்குடி சின்னப் பக்கிரியா பிள்ளை முதலானவர்கள் இவர் கானத்தைக் கேட்டு, இவருடைய நட்பினால் விசேஷ யோக்யதையை யடைந்து கியாதியைப் பெற்றதாகத் தெரிகிறது. இவருடைய கச்சேரிகளுக்கு பிடில் கோவிந்தஸாமி பிள்ளை அவர்களும் மிருதங்கம் அழக நம்பியா பிள்ளையும் கஞ்சிரா மான்பூண்டியா பிள்ளை அவர்களும் பக்க வாத்தியம் வாசித்து வந்தார்கள்.

எந்த வீணை வைத்தியநாதய்யர் ஆரம்ப காலத்தில் இவரை வேறு தொழில் செய்யலாம் என்று சொன்னாரோ, அவரே பிற்காலத்தில் இவருடைய கச்சேரியை மாயவரத்திலேயே கேட்டு "நீ மஹா வித்வான்தான் அப்பா" என்று சொல்லிக் கொண்டாடினார்.

பரஸ்பரம் !



மரத்துறை வைத்தியநாத ஐயர்

சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர்

சோழமண்டலத்தில் மிக்க மகிமையுடன் விளங்கிய சங்கீத வித்வான்களில் இவர் மிகச் சிறந்தவர். பால்யத்தில் அநேகம் சங்கீதக் கச்சேரிகளைக் கேட்கும்பொழுது தாமும் ஒரு பெரிய வித்வானாகக் கச்சேரி செய்ய வேண்டுமென்ற ஆவல் இவருக்கு ஏற்பட்டது. ஆனால் ஆவலுக்குத் தக்கபடி பாடி ஜனங்களைத் திருப்தி செய்து வைக்கக்கூடிய சாரீரம் இயற்கையாக இவருக்கு ஏற்படவில்லை. எப்படியாவது பூமண்டலத்தில் தம் பெருமையைச் சங்கீதத்தால் நிலை நாட்ட வேண்டுமென்ற தீவிர பிடிவாதத்துடன் சங்கீத வித்தையை அப்பியசிக்க எத்தனம் செய்தார். தம் இஷ்டப்படி சாரீரம் அமையாததால் சில சமயங்களில் இவர் இந்த வித்தை பிரயோஜனமில்லை என்று வெறுப்படைந்து வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதும் உண்டு.

ஒரு சமயம் ஆரம்ப காலத்தில் மாயவரம் இரட்டைத் தெரு வள்ளலார் கோயிலில் பாடினார். அதற்கு வீணை வைத்தியநாதய்யர் விஜயம் செய்திருந்தார். வீணை வைத்தியநாதய்யர் அவர்கள் பாட்டைக் கேட்டுவிட்டு, "ஐயோ, பாவம்! வீணாக ஏன் இப்படிச் சிரமப்படுகிறாய்? இந்தச் சிரமத்தை வேறு தொழிலில் காண்பித்தால் பத்து துட்டு, துக்காணி கிடைக்கும்" என்று ஏளனமாகச் சொல்லி விட்டுச் சென்றார்.

அன்று வைத்தியநாதய்யர் சொன்ன வார்த்தையே, இந்த மரத்துறை வைத்தியநாதய்யருக்குச் சங்கீதத்தில் அதிகப் பிடிவாதத்தை ஊட்டியது. எப்படி விசுவாமித்திரர் வசிஷ்டர் வாயினால் பிரும்மரிஷி என்று சொல்ல வேண்டுமென்று எண்ணங் கொண்டு தவம் செய்தாரோ, அம்மாதிரியே கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர் அவர்களும் வீணை வைத்தியநாத ஐயர் வாக்கினால் தம்மை மஹாவித்வான் என்று கூப்பிடும்படியாய்ச் செய்ய வேண்டுமென்ற தீவிர வைராக்யத்தைக் கொண்டு இடைவிடாத உயர்ந்த சாதகத்தைச் செய்ய ஆரம்பித்தார். பிடிவாதத்தினுடைய வலிமையால் சாரீரத்தைக் கரைத்து உயர்ந்த பிருகாக்கள் பேசும்படியான சாதகத்தைச் செய்து வந்தார். நாள் ஆக ஆக இவருக்குக் கொஞ்சம் திருப்தி ஏற்பட்டு இனி சங்கீதத்தைக் கைவிடக் கூடாது என்ற உத்சாகமும் உண்டாயிற்று. சாதகமும் வரவர வலுத்து வந்தது.

கஞ்சிரா வாத்தியத்திலும், தாளத்திலும், நிகரில்லாத புகழ் அடைந்த மான்பூண்டியாப் பிள்ளை அவர்களுடைய சிநேகம் இவருக்குச் செம்மையாய் ஏற்பட்டபடியால் இவருடைய தாள ஞானமும் ஸ்வர ஞானமும் வலுத்துவிட்டன. பிரக்யாதியுடன் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்துச் செய்துவிட்டார். ஆரம்பத்தில், இசை, தாளம் இந்த இரண்டில், தாளத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவந்த இவர் பிற்காலத்தில் இசையை ரொம்பவும் பிராதான்யமாக வைத்துப் பாடினார். இதற்குக் காரணம், திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் அவர்களே.

ஒரு சமயம் சென்னையில் கிருஷ்ணய்யர்வாள் இவருக்குப் பக்க வாத்யம் வாசிக்கும்போது கச்சேரி முழுதும் லயவகாரக் கச்சேரியாக இருந்தபடியால், கிருஷ்ணய்யர்வாள், சில வார்த்தைகள் பட்டவர்த்தனமாய் வைத்தியநாதய்யரிடம் சொல்ல அதிலிருந்து ஐயர் இசையையே பிராதான்யமாகக் கொண்டு பாட ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் இவரிடத்தில் சாதாரண மதிப்பு வைத்திருந்த ஜனங்கள், பிறகு இவருடைய கச்சேரியைக் கேட்கும்பொழுது அடைந்த ஆனந்தம் கங்குகரை காணாது. சாரீர பாகத்திலும், ஸ்வர சஞ்சாரத்திலும், தாள ஞானத்திலும், பாணியிலும் எவ்வளவு உயர்வு இருக்க வேண்டுமோ அவ்வளவையும் வகித்துக் கச்சேரி செய்ய ஆற்றார். இவர் கானத்தில் ஒரு பெரிய விசேஷம். கச்சேரி ஆரம்பிக்கும் காலத்தில் இவர் சாரீரத்தைக் கவனித்தால், ஒரு சாமான்ய ஞானஸ்தனுக்குக் கூட "இதென்ன சாரீரம்? இவருக்குத்தானா இவ்வளவு கூட்டமும், ஆர்ப்பாட்டமும், பிரசித்தியும்? எவ்வளவு நாழிதான் இதைச் சாதிக்க முடியும்?" என்று

பலசரக்கு

ஸ்ரீ வெண்டல் வில்கி சுங்கிங்குக்கு விஜயம் செய்தபொழுது, அந்த நகர மேயர் அவருக்கு ஒரு விருந்து வைத்தார். விருந்தின் போது ஸ்ரீ வில்கிக்கு ஐஸ் கிரீம் வழங்கப்பட்டது. ஸ்ரீ வில்கி கன குஷியாக ஐஸ் கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், மேயர், "வெகு காலமாக இந் நகரத்தில் ஐஸ் கிரீம் சாப்பிடுவது தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று உங்களுக்காகத் தடை நீக்கப்பட் டிருக்கிறது. நாளைக்குத் திரும்பவும் தடை போடப்படும்" என்று சொன்னார். தமக்கு அளிக்கப் பட்ட இந்த கௌரதையைக் கண்டு ஸ்ரீ வில்கி சந்தோஷப் பட்டு விட்டு, ஐஸ் கிரீம் சாப்பிடுவது தடை செய்யப்பட்டிருப்பதின் காரணத்தை விசாரித்தார். அதற்கு மேயர் சொன்னார். "இந் நகரத்து ஐஸ் கிரீமைச் சாப்பிட்டால் உடனே வாந்தி பேதி வந்துவிடுகிறது."



★


லாயிட் ஜார்ஜ் வக்கீலாக இருந்த காலையில் ஒரு நாள் தம் வண்டியில் போய்க்கொண்டிருந்தார். வழியில் ஒரு சிறு பெண்ணைக் கண்டு அதை வண்டியில் ஏற்றிக்கொண்டார். ஆனால் லாயிட் ஜார்ஜ் என்ன பேச்சுக் கொடுத்தும் அந்தப் பெண் அவருடன் பேச மறுத்து விட்டாள்.



வீட்டுக்குச் சென்றதும், பெண்ணின் தாயார் இதற்குக் காரணத்தை விசாரித்தாள். அதற்குப் பெண், "நீதான் அவர் வக்கீல். அவர் பீஸை முன்னால் வைத்து விட்டுத்தான் பேச வேண்டும் என்று சொல்லியிருக்கிறாயே!" என்றாள்.

★

ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு எதிர்த்த கட்சியைச் சேர்ந்த ஒரு அமெரிக்கன் யுத்தத்தில் சேர்ந்திருந்தான். ஜப்பானியர்கள் ஒளிந்துகொண்டிருந்தால் அவர்களைக் கண்டு பிடிப்பது எப்படி என்று ஒரு பெரியவரைக் கேட்டான். அதற்கு அவர், "ஹீரோஹீடோ ஒழிக! என்று கத்து. உடனே ஜப்பானியனுக்குக் கோபம் உண்டாகித் துள்ளிக் குதிப்பான். நீ சுட்டுவிடலாம்" என்று சொன்னார். ஜப்பானிய சக்கரவர்த்தியின் பெயர் ஹீரோஹீடோ ஆகும்.



ஆனால் யுத்தத்திலிருந்து திரும்பி வந்த அமெரிக்கன் அத்தனை குஷியாகக் காணப்படவில்லை. காரணம் என்ன என்று பெரியவர் விசாரித்ததற்கு, "நான் ஹீரோஹீடோ ஒழிக என்று கத்தினேன். அதைக் கேட்டு ஜப்பானியன் துள்ளிக் குதித்தான். ஆனால் 'ரூஸ்வெல்ட் ஒழிக!' என்று அவன் கத்தினான். அதைக் கேட்டதும் என் கட்சியைச் சேர்ந்தவனை நான் எப்படிக் கொல்லுவது என்று திரும்பி விட்டேன்" என்று அவன் சொன்னான்.

★

ஒரு ஆஸ்பத்திரியில் ஒரு ஜெர்மன் குழந்தை, ஒரு யூதக் குழந்தை, ஒரு இத்தாலியக் குழந்தை மூன்றும் கலந்து போய்விட்டன. எந்தக் குழந்தை எந்த தேசத்தைச் சேர்ந்தது என்று கண்டு பிடிப்பதற்கு நர்ஸ் ஒரு யுக்தி செய்தாள். குழந்தைகளின் முன்னால் நின்று கொண்டு, "ஹெய்ல் ஹிட்லர்!" என்று கூவினாள். உடனே ஜெர்மன் குழந்தை எழுந்து நின்று நாஜி முறையில் வணக்கம் செய்தது. யூதக் குழந்தை எழுந்து மூஷ்டியை ஆட்டிற்று. இத்தாலியக் குழந்தை அழ ஆரம்பித்து விட்டது



அன்னம்மாளின் ஆனந்தம்

வஸந்தன்

அன்னம்மாள் அந்தச் சின்னஞ் சிறு குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு என்னவெல்லாமோ சொல்லித் தாலாட்டிக் கொண்டிருந்தாள். அப்பொழுது அந்தக் குழந்தை அவளைப் பார்த்துச் சிரித்ததானது, "உனக்கு இதைத் தவிர வேறு நல்ல பாட்டு ஒன்றும் தெரியாதா?" என்று கேலி செய்வது போலிருந்தது. அது, தன் சின்னஞ் சிறு கையை நீட்டி அவள் வாயைப் பொத்தியதானது, "போதுமே, இந்தப் பாட்டு!" என்று அலுப்புடன் சொல்வது போலிருந்தது.

ஆனால், அக் குழந்தையின் முகத்தைப் பார்க்கப் பார்க்க, அதன் 'கலீர்' சிரிப்பைக் கேட்கக் கேட்க அன்னம்மாளுக்கு ஆனந்தமாகத்தான் இருந்தது. அந்தக் குழந்தையின் புன்சிரிப்பில் அவள் இவ்வுலகத்தை மறந்து விட்டாள். தன்னையும் மறந்து, "துரோபதி!" என்று கூப்பிட்டாள். ஆனால் அவள் மடியில் கிடந்தது துரோபதி அல்ல; அவள் பேத்தி செல்விதான். ஆனால் அவளுக்குப் பேத்தியைப் பார்க்கும்போதெல்லாம் பெண் துரோபதியின் ஞாபகந்தான் வந்தது. அதே முகம், அதே கண், மூக்கு, நெற்றி எல்லாம் தத்ரூபம் துரோபதி மாதிரியேதான். அதே கன்னங் கரேலென்ற சுருட்டை மயிர்! அடாடா! அந்தச் சிரிப்பு!



அன்னம்மாளின் மனம் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் சென்றது. அப்பொழுது துரோபதியும் இம்மாதிரி குழந்தையாகத்தான் இருந்தாள்.

அன்னம்மாளுக்குக் கலியாணமாகி எட்டு வருஷங்கள் கழித்துத்தான் துரோபதி பிறந்தாள். அன்னம்மாள் ஏழை வீட்டுப் பெண்தான். ஆனாலும் அவள் அழகைக் கண்டு சொக்கிப்போய் அவ்வூரின் புதுப் பணக்காரன் ஒருவன் அவளைக் கலியாணம் செய்து கொண்டான். புருஷன் வீட்டில் அவள் எவ்வளவோ சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தாள். குழந்தை பிறக்க வேண்டுமென்று அவள் வேண்டிக் கொள்ளாத தெய்வம் இல்லை; போகாத ஊர் இல்லை. கடைசியில் "குழந்தை பிறக்குமா?" என்று தவங்கிடந்த அன்னம்மாளின் கலியைத் தீர்ப்பதற்குத் துரோபதி தோன்றினாள்.

துரோபதி பிறந்ததும், குடும்பத்தில் எதிர்பாராத விபத்து ஒன்று ஏற்பட்டது. குழந்தைக்கு அன்னம்மாள் என்னவெல்லாமோ அலங்காரம் செய்ய வேண்டுமென்று ஆசைப் பட்டாள். விதம் விதமாக ஆடைகளையும் அணிகளையும் போட்டு அழகு பார்க்க நினைத்தாள். ஆனால், இப்படிப்பட்ட துரதிருஷ்டம் வருமென்று அவள் எதிர்பார்க்கவில்லை. தன் புருஷன் திடீரென்று சொத்துக்களை இழந்து, தானும் குழந்தையும் இப்படித் தவிக்க வேண்டி வரும் என்பதை அவள் எப்படி அறிவாள்?

துரோபதியின் குழந்தைப் பருவத்தில் குடும்பம் பட்ட மகத்தான கஷ்டங்களை நினைத்துக் கொண்டதும் அன்னம்மாளுக்கு துக்கம் தொண்டையை அடைத்

தது. ஆனால் எவ்வளவு கஷ்டம் வந்தால் தான் என்ன, குழந்தை துரோபதியின் மோகனச் சிரிப்பில் அவ்வளவு கஷ்டங்களும் மறைந்து போகும்!....

.... அப்பொழுது, 'களுக்'கென்று சத்தம் கேட்டது. அத்தனை நாழிகை இமை கொட்டாமல் பழைய சம்பவங்களை நினைத்து உட்கார்ந்திருந்த அன்னம்மாள் சுயப் பிரக்ஞை வந்தவளாய்ச் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். பேத்தி செல்லி அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள். அவள் குழந்தையை எடுத்து மார்புடன் அணைத்து முத்தமிட்டாள்.

* * *

“அம்மா! அம்மா!” என்று கூப்பிட்டுக்கொண்டே குழந்தை செல்லி ஓடி வந்தாள். இப்பொழுது செல்லிக்கு வயது எட்டு. வாசற்படியில் முறத்தில் எதையோ புடைத்துக் கொண்டிருந்த அன்னம்மாள் “ஏனம்மா, ஏன்?” என்று கேட்டாள். செல்லி தன் பாட்டியை “அம்மா!” என்றுதான் கூப்பிடுவது வழக்கம். “அம்மா! அம்மா! அப்பாவை எங்கே அம்மா காணோம்? எங்கேயோ ஊருக்குப் போயிருக்கிறார் என்று எல்லாரும் சொல்கிறார்களே, நிஜமா?” என்றாள் குழந்தை முகத்தில் வியப்பும் ஆவலும் தோன்ற.

மறுபடியும் அன்னம்மாளின் மனம் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் சென்றது. “என்ன அதிசயம்! துரோபதி மாதிரியே இவளும் கேட்கிறாளே!” என்று அவள் ஆச்சரியப்பட்டாள். அவள் மகள் துரோபதி ஏழு, எட்டு வயதுக் குழந்தையாயிருக்கும் போது, முருகையன் சிங்கப்பூருக்குப் புறப்பட்டுப் போனது அன்னம்மாளுக்கு ஞாபகம் வந்தது. அப்பொழுது வீட்டில் தரித்திரம் பிடுங்கித்தின்றது. “திரை கடல் ஓடித் திரவியம் கொண்டு வருவேன்” என்று சொல்லிக் கொண்டு முருகையன் கப்பலுக்குப் போனான். அக்கரைச் சீமையிலிருந்து முருகையன் வேண்டிய பணம் அனுப்பினான். கணவன் பிரிவாற்றாமையைக் கூடக் குழந்தையின் பேச்சிலும் விளையாட்டிலும் அன்னம் மறந்திருந்தாள். துரோபதியைப் பெரிய செல்வந்தர்கள் வீட்டுப் பெண் போலவே அவள் வளர்த்துச் சீராட்டினாள். குழந்தையின் சாமர்த்தியத்தையும், அழகையும் கண்டு வியக்காதவர்கள் கிடையாது. “ராஜா வீட்டுக் குழந்தை மாதிரியல்லவா இருக்கிறது?” என்பார்கள் எல்லோரும். “ஏ ராணி! இங்கே என்னத்திற்காக வந்து புளியம் பழம் பொறுக்குகிறாய்? போ, அரண்மனைக்கு!” என்று அவள் சிநேகிதிகள் கேலி செய்வார்கள்...

...“அம்மா! அப்பா எங்கே போயிருக்கிறார் என்று கேட்கிறேன், சொல்ல மாட்டாயா?” என்ற செல்லியின் குரலைக் கேட்டு, சட்டென்று சுய நினைவு வந்தவளாய் அன்னம்மாள் திரும்பிப் பார்த்தாள். அப்பொழுது, செல்லி தன் தோளைப் பிடித்துக் கொண்டு பரிதாப முகத்துடன் நிற்பதைக் கண்டு, “ஆமாம்; உன் அப்பா ஊருக்குப் போயிருக்கிறார். நமக்குப் பணம் நிறைய அனுப்புவார் — எல்லாம் உனக்கு நல்ல நல்ல சொக்காய் வாங்கிக் கொடுக்கத்தான். நல்ல நல்ல புஸ்தகங்கள் வாங்கி நீ வாசிக்க வேண்டுமென்றுதான்!” என்றாள்.

வருஷங்கள் ஓடிச் சென்றன. இப்பொழுது செல்லி பதினெட்டு வயது இள மங்கையாக விளங்கினாள். அவளது கருவிழிகள், சிவந்த உதடுகள், புன்னகை எல்லாம் அன்னம்மாளுக்கு மதி மயக்கத்தை உண்டு பண்ணின. எதிரே நிற்பது செல்லியா, அல்லது துரோபதிதானா என்று அவள் அடிக்கடி மயங்குவாள். செல்லி துரோபதியாகத் தோன்றும்போது, அன்னம்மாளின் உடலில் புத்துணர்ச்சி உண்டாகும். தன்னை நாற்பது வயது அன்னம்மாளாக அவள் எண்ணிக் கொள்வாள். ஆனால் சட்டென்று மறுவினாடி தன் உடம்பைப் பார்த்துக் கொண்ட பிறகுதான் அவள் பிரமை நீங்கும்.

“அம்மா! நீ சொல்கிற அந்த பெருச்சாளியைக் கட்டிக்கொள்ள மாட்டேன்! பலவந்தமாய்க் கட்டினால் அந்தச் சுனையில் விழுந்து செத்துப் போவேன்!” என்றாள் செல்லி ஒருநாள். இப்படிச்



சொல்லும்போது அவள் முகம் ஆத்திரத்தாலும், துக்கத்தாலும் சிவந்தது. "அடி பாவிப் பெண்ணே! துரோபதி மாதிரியே சொல்கிறாயே! அவளும் இப்படித்தான் பிடிவாதம் பிடித்து ஆறுமுகத்தைக் கட்டிக் கொண்டாள். நீயும் அவள் மாதிரியே பிடிவாதம் பிடிக்கிறாயே. தெரியும், உன் எண்ணம் தெரியும். கோடி வீட்டுப் பையன் ஒருவன் உன்னைப் பார்த்துப் பல்லைப் பல்லை இளிக்கிறானே, அவனைத்தான் கலியாணம் செய்து கொள்வாயாக்கும்! நானும் ஏற்கெனவே பார்த்து விட்டேன், செல்வி! அந்தப் பையன் ஜாதகம் கொஞ்சம்கூட உனக்குப் பொருத்தமில்லை. வேண்டாம், நான் சொல்கிறதைக் கேள்!" என்று கெஞ்சினாள் அன்னம்மாள்.

கடைசியில், செல்வியின் கட்சிதான் ஜயித்தது. அவள் விருப்பப்படியே செல்விக்கும் கோடி வீட்டுச் சுந்தரத்திற்கும் கலியாணம் நடந்தது.

இரண்டு வருஷங்கள் கழிந்தன. திகிலுடனும் ஆவலுடனும் சென்ற ஒன்பது மாதங்களாக ஒவ்வொரு நாளையும் அன்னம்மாள் விரல் விட்டு எண்ணிக் கொண்டிருந்தாள். அவள் எதிர்பார்த்த நாள் நெருங்க நெருங்க அவள் நெஞ்சு 'திக்' 'திக்'கென்று அடித்துக் கொண்டது. அளவிட முடியாத பயமும் சோகமும் அவளை வாட்டிக் கொண்டிருந்தன. அன்று, பட்டணத்திலிருந்து டாக்டர் வண்டியில் வந்து இறங்கினார். வீட்டுக்குள்ளே யிருந்து வேதனை முனகல் கேட்டது.

அன்னம்மாள் பிரசவ அறையில் பேத்தியின் அருகில் உட்கார்ந்து உதவ முடியவில்லையே என்று துடித்தாள். ஆனால், மங்கின கண்களுடனும், நடுங்கும் கைகளுடனும் அவள் என்ன செய்ய முடியும்? முதுமையும் மனச் சோர்வும் அவள் திடத்தைக் குலைத்து விட்டன.

"அப்பா! குழந்தைக்கு உடம்பு எப்படி யிருக்கிறது? வைத்தியர் என்ன சொல்கிறார்?" என்று சுந்தரத்தைக் கேட்டுக் கொண்டே யிருந்தாள் கிழவி. "ஐயோ! என்ன செய்வேன்! குழந்தை துரோபதி மாதிரியே இவளும்......" இதை நினைத்ததும் அவள் கண்களில் நீர் பெருகிற்று. "வீரபத்திர ஸ்வாமி! நீதான் என் குழந்தையைக் காப்பாற்றணும்! இன்னொரு தடவை என்னை மோசம் செய்து விடாதே! அப்படிச் செய்வதானால் என்னை இப்பொழுதே கொண்டு போய்விடு!" என்று பிரார்த்தித்தாள்.

டாக்டர் உள்ளே போனதும், உலகமே அவளைச் சுற்றிச் சுழல்வதுபோலிருந்தது.

அப்பொழுது, உள்ளே யிருந்து 'வீல்' என்று சப்தம் வந்தது.

'என்ன?' என்றாள் கிழவி.

"செல்வி பெற்றுப் பிழைத்துவிட்டாள். துரோபதி மாதிரி அவள் உன்னை மோசம் செய்யவில்லை, பாட்டி! கவலைப்படாதே" என்று சொல்லிக் கொண்டே சுந்தரம் கிழவியை நெருங்கியவன் அப்படியே மலைத்து நின்று விட்டான்.

ஆம்; அன்னம்மாள் கவலையையோ ஆனந்தத்தையோ பொருட்படுத்தாத நிலையை அடைந்து விட்டாள். ஏனெனில், செல்வி பிழைத்த ஆனந்த மிகுதியால் அவள் நாடி நின்று விட்டது!



★

ஆபீஸ் பழக்கம்!

மனைவி:—ஒரு நாளைக்கு லீவு கிடைச்சுடுத்து என்று இப்படி மத்தியானத்திலே தூங்கறேளே; நாளைக்கு இந்தப் பழக்கந்தானே ஆபீஸிலும் வரும்?

கணவன்:—அட பைத்தியமே! இந்தப் பழக்கம் ஆபீஸிலிருந்து வந்ததுதான்!

★

படித்துப் பார்!

எதிர்கால உலகம்

[ஆசிரியர்: கு. ப. ராஜகோபாலன். பிரசுரம்: நவயுகப் பிரசுராலயம். விலை: ரூ. 1—12—0]

நாளைக்கு உலகம் எப்படியிருக்கும், எப்படி யிருக்கவேண்டும், எப்படி யிருக்கக் கூடாது—என்று நிர்மானிக்க வேண்டியவர் 'ஆதி யந்த மில்லாத' பரம்பொருளாக இருந்தபோதிலும், மானிடர்களாகிய நாம் சும்மா இருப்பதில்லை. உலகம் இப்படி யிருந்தால் நல்லது. அப்படி யிருந்தால் தேவலை — என்று நாம் ஆசைப்படுகிறோம். மகாத்மா காந்தி, டாகூர், எச். ஜி. வெல்ஸ், ஜவஹர்லால் நேரு, பெர்னார்ட் ஷா — முதலிய பெரியார்கள் பகிரங்கமாகத் தங்கள் ஆசைகளை அவ்வப்பொழுது தெரியப் படுத்தி வருகிறார்கள். உலகத்தின் எதிர் காலத்தைப் பற்றி அவர்கள் காணும் கனவுகளுடன், கு. ப. ரா. வின் கனவும் சேர்ந்து இப்புத்தகத்தில் மிளிர்கின்றன.

பச்சைக் கிளி

[ஆசிரியர்: கி. சந்திரசேகரன். பிரசுரம்: கலை மகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை: ரூ. 2]

'பச்சைக் கிளி' என்ற தலைப்புக் கேற்றாற் போலவே, கிளிமொழியினும் இனிய மழலையில் குழந்தைகள் பேசுவதையும் விளையாடுவதையும் இந்தப் புத்தகத்தில் காணலாம். பச்சைக் கிளிகளுடன் விளையாடும் வாஸு, "அப்பா! சத்தம் போடாதே! அதுகள் ஓடிப் போய்விடும்!" என்று அப்பாவைப் பயமுறுத்துகிறான். "எனக்குப் புதுப் பாவாடை மேலாக்கு எல்லாம் உண்டோன்னோ? நான் அதை யெல்லாம் கட்டிண்டுதான் பட்டாஸ் விடுவேன்" என்கிறாள் ஏழைப் பெண் காமு. "ஸ்வாமி! மணிக்கு அம்மா இருப்பதால்தானே அவனுக்கு இவ்வளவு கொழுப்பு? அவனையும் என்னாட்டமா செய்துடேன்!" என்று ஆத்திரத்தில் வேண்டிக் கொள்கிறான் தாயில்லாக் குழந்தை ராஜு. இப்படியாகக் கள்ளங் கபடற்ற குழந்தைகள் மனத்தில் தோன்றும் பற்பல அற்புத உணர்ச்சிகளைப் படிக்கும் போது, இதன் ஆசிரியர் தம் வாழ்வின் பெரும் பகுதியையும் குழந்தைகளுடன்தான் கழிக்கிறாரோ என்று தோன்றும். கதைகள் ஒவ்வொன்றும் மணி மணியாக இருக்கின்றன.

காவேரி

[ஆசிரியர்: ராய சொக்கலிங்கம், பிரசுரம்: நவயுகப் பிரசுராலயம், காரைக்குடி. விலை ரூ. 1.]

ஸ்ரீ ராய சொக்கலிங்கம் திருச்சி ரேடியோ நிலையத்தில் செய்த ஆறு பிரசங்கங்கள் இந் நூலில் அடங்கி யிருக்கின்றன. காவேரி, இளவேனில், குயில் பாட்டு—போன்ற மனோகரமான தலைப்புக்களுடன், சொற் சுவையும், பொருட் சுவையும் நிறைந்த இப்பிரசங்கங்கள் இலக்கிய ரஸிகர்களுக்கு இனிய விருந்தாகும்.

நமது தாய்நாடு

பாரத மக்களுக்கு தேச பக்தி வெறியை ஊட்டிய மகா புருஷர்களில் முதன்மையானவர் சுவாமி விவேகானந்தர். அந்த மகான் நமது தாய்நாட்டின் பழைய பெருமையையும் வருங்கால மேன்மையையும் பற்றிக் கூறிய விஷயங்கள் இந்த நூலில் தொகுத்து வெளியிடப் பட்டிருக்கின்றன. மேலட்டையில் நமது தாய் நாட்டைச் சுவாமிகள் கையில் தடியுடன் காத்து நிற்கும் கம்பீரக் காட்சி காணப்படுகிறது.

பிரசுரம்: ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

விலை போடவில்லை: ஆனால் என்ன வேணுமானாலும் கொடுக்கலாம்.

கர்வ பங்கம் — ஜமீந்தாரிணி

இரண்டும் ஸ்ரீ சரத் சந்திரரின் அழகிய கதைகள்; இரண்டும் ஸ்ரீ ஆர். ஷண்முக சுந்தரத்தின் சிறந்த மொழி பெயர்ப்பு.

விலை தனித் தனி அணா 12. பிரசுரம்: புதுமலர் நிலையம், கோயமுத்தூர்.

தீக்கிடம்!



"சோனிப்பிள்ளைச் சந்திலே எனக்கு இடமே போதவில்லை. இப்பொழுது ஒரு மாதமாய்ப் பெரிய தெருவிலே குடியிருக்கிறேன்."

கணக்குப் பாடம் வாசித்த என் தங்கை மூலமும் இதே கணக்கைக் கேட்டு அனுப்பினீர். இந்தக் கணக்கைப் போடத் தெரியாது என்று நான் என் தங்கை முன்னிலையிலும் அவமானப் பட வேண்டி வந்தது.

என் தம்பி, என் தங்கை இவர்கள் இருவர் முன்னிலையிலும் நான் அவமானப் பட்டது போதாது என்று இன்னும் மூன்று வருஷங்கள் கழித்து என் மருமாள் முன்னிலையிலும் இதே கணக்குக்காக நான் அவமானப்பட நேர்ந்தது. "தன் மாமா எவ்வளவோ கெட்டிக்காரர்" என்று நினைத்துக் கொண்டிருந்த என் மருமாள் சுலோசனுவுக்கு, "பூ! மாமா இவ்வளவுதானு?" என்று ஆகிவிட்டது.

★ ஐயா, போனுல் போகிறது, தம்பி, தங்கை, மருமாள், இவர்கள் என்ன வேண்டுமானுலும் நினைத்துக் கொண்டு போகட்டும். ஆனுல் எதற்காக ஐயா, என் பிள்ளையிடமும் இதே கணக்கைக் கேட்டு அனுப்பினீர்? உமக்கு என்ன ஐயா, என் மீது அத்தனை வர்மம்? அப்படியாவது ஒரு பிள்ளையுடன் விட்டீரா, ஒவ்வொரு பிள்ளை மூலமும், இதே கணக்கைக் கேட்டு அனுப்பிக்கொண்டே இருந்தீர். நானும் ஒவ்வொரு பிள்ளையிடமும் இந்தக் கணக்குப் போடத் தெரியாது என்று சொல்லி அவமானப்பட்டுக்கொண்டேயிருந்தேன்.

இதனுல் அவர்கள் என் மீது கொண்டிருந்த நல்லபிப்பிராயத்தையும் இழக்க வேண்டி வந்தது. இந்தக் கணக்கை நீர் என் பிள்ளையிடம் கேட்டு அனுப்ப வேண்டியதுதான் தாமதம், அவன் மீது எனக்கு இருக்கும் 'ஹத்து'ப் போய்விடும். அன்றிலிருந்து அவனைப் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு படிடா, நோட்டை எடுத்துக் கணக்குப் போடுடா என்று சொல்லக் கூட எனக்குத் தைரியம் வராது. இப்படி என் பிள்ளைகள் என்னை மதிக்காமல் செய்தது போதாது என்று பெண்களையும் என்னை மதிக்காமல் செய்தீர்.

★ இப்பொழுது என்னடா என்ருல், என்னை இத்தனை தூரம் அவமானப் படுத்தினது போதாது என்று என் மூத்த பேரனிடமும் இதே கணக்கைக் கேட்டு, என்னைக் கேட்டுத் தெரிந்து கொண்டுவரும்படி மறுபடியும் சொல்லியிருக்கிறீர்!

நாற்பது வருஷ காலமாக எதற்காக என்னை இப்படி இந்தக் கணக்கைக் கேட்டு நச்சரிக்கிறீர் என்று தெரியவில்லை. இந்தக் காலத்தில் கடன் கொடுத்தவன் கூட ஆளை இப்படி ஹிம்சிக்கிறதில்லை.

தாங்கள் இப்படி என்னை விடாப் பிடியாகக் கழுத்தறுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து எனக்கு ஒரு சந்தேகம் தட்டுகிறது. ஒரு வேளை உங்களுக்கே இந்தக் கணக்குத் தெரியாமல்தான் என்னை நச்சரித்துத் தெரிந்து கொண்டு விடலாம் என்று பார்க்கிறீரோ, என்னமோ!

ஆனுல் இனி மேலும் என்னுல் இந்த அக்கிரமத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. இந்தப் பேரனுடனுவது தாங்கள் இந்தக் கணக்குக்கு விடை கேட்டு அனுப்பும் வழக்கத்தை நிறுத்திக் கொள்ளும். இல்லையோ, உம் பள்ளிக்கூடத்துக்கு வந்து, ஹெட்மாஸ்டருக்கு முன்னிலையில் உம்மை நிறுத்தி வைத்து, உம்மையே இந்தக் கணக்குக்கு விடை சொல்லச் சொல்லி விடுவேன். ஜாக்கிரதை!

இப்படிக்கு
தலைவிரிச்சான்.



★

டாக்டர்:—ஏன் மிஸ்டர் அய்யர், நான் சொன்னது போல் கதவுகளையெல்லாம் திறந்து வைத்துக்கொண்டதில் தலை வலியும் ஜலதோஷமும் போய் விட்டதோல்லியோ?

ஐயர்:—அது மாத்திரமா போச்சு? அத்துடன் என் தங்கக் கைக் கடியாரம் ஒன்றும் போயிடுத்து, டாக்டர்!

★



ஐயா கணக்கு வாத்தியாரே!

★

நாடோடி

★

★ ஐயா, கணக்கு வாத்தியாரே,

நானும் என் நாற்பத்தெட்டு வருஷ அனுபவத்தில் பார்த்தாலும் பார்த்தேன், தங்களைப் போன்ற விடாக் கண்டரைப் பார்த்ததே இல்லை.

"யார் ஐயா, நீர் என்னைப் பார்த்து விடாக்கண்டர் என்று சொல்வதற்கு?" என்று அந்த பிளாக் போர்டில் மாட்டப் பட்டிருக்கும் தலைப்பாகையைத் தலையில் அணிந்துகொண்டு, மேஜையில் இருக்கும் பிரம்பைக் கையில் எடுத்துக் கொண்டு சண்டைக்கு வருகிறீரோ?... அப்படியானால் இதோ, நான் யார் என்று தங்களுக்குத் தெரிவித்து விடுகிறேன். நீர் மாட்டில் உம் பள்ளிக்கூட ஞாபகத்தில் என் முதுகில் இரண்டு போட்டு வைக்கப் போகிறீர்!

உம் பள்ளிக்கூடத்தில், நீர் கணக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் மூன்றாவது வகுப்பில் சுப்பிரமணியன் என்று ஒரு பையன் இருக்கிறானே தெரியுமா, சாக்ஷாத் அவன் தாத்தா தான் நான்.

...ஊம், நீர் என்னை யார் என்று புரிந்து கொள்ளவே யில்லை. சரி, இருபது வருஷத்துக்கு முந்தி ராமசாமி என்று ஒரு பையன் தங்கள் வகுப்பில் வாசித்தானே, நெட்டையா, சிகப்பா, குடுமி வைத்துக் கொண்டு, ஞாபகம் இருக்கிறதா? அவன் தகப்பனார்தான் நான்.

ஊஹூம், உமக்கு என்னை இன்னும் யார் என்று அடையாளம் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தக் காலத்தில் எல்லாப் பையன்களும்தான் குடுமி வைத்துக் கொண்டிருந்தார்கள், அப்படியிருக்க, திருப்பதியில் மொட்டைத் தலையனைக் கண்டாயா என்பது போல் எப்படிக் கண்டு பிடிப்பது என்று கேட்கிறீர், இல்லையா?

ரொம்ப நியாயம். அப்படியானால் இன்னும் இருபது வருஷத்துக்கு முந்திச் செல்லும். தாங்கள் புதிதாக இந்தப் பள்ளிக்கூடத்தில் கணக்கு வாத்தியாராக வந்து சேர்ந்தீரே, அந்த வருஷத்தைத்தான் சொல்கிறேன். அப்பொழுது பாலகிருஷ்ணன் என்ற எட்டு வயதுப் பையன் ஒருவன் மூன்றாவது வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தானே, ஞாபகம் இருக்கிறதா?

...என்ன, ஞாபகம் இல்லையா? .... சரி, என்ன பண்ணுகிறது? உம்மைக் குற்றம் சொல்லி என்ன பிரயோசனம்? அந்தக் காலத்திலேயே பாலகிருஷ்ணன் என்று சொன்னால் ஒரு வாத்தியாருக்கும் தெரியாது. அந்தப் பாழாய்ப் போன "ஷோக் மாப்பிள்ளை" தான், என் பெற்றோர்கள் எனக்கு அழகாக வைத்த பெயரை எல்லாரும் மறக்கும்படி செய்துவிட்டாரே?

★ நான் யாரை ஷோக்கு மாப்பிள்ளை என்று குறிப்பிடுகிறேன் என்றாவது தெரிகிறதோ? வேறு யார், எல்லாம் அந்த மூன்றாவது வகுப்பு வாத்தியார் கணபதி சுப்ரமண்ய அய்யரைத்தான். நூறும், இருநூறும் செலவழித்து எங்கள் பெற்றோர்கள் எங்களுக்கு அழகழகாகப் பெயர்கள் இட வேண்டியது, இந்த மனுஷன் உடனே அதை மாற்றி விட வேண்டியது, இதைத்தான் அவர் தன் தொழிலாகக் கொண்டிருந்தார்!

இதனால் என்ன ஆகிவிட்டது என்றால் தங்கள் பிள்ளைகளைத் தேடிக் கொண்டு பெற்றோர்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்து பெயரைச் சொல்லி விசாரித்தால் யாருக்கும் புரிவதில்லை.

ஏன், ஒரு தடவை நீங்களே ஆடு திருடினவனைப்போல விழிக்கவில்லையா?

என்னோடு வாசித்துக் கொண்டிருந்தானே, 'வழுக்கைத் தலை' அவன் தகப்பனார் வந்து, உங்களைப் பார்த்து, "மகாதேவன் எப்படிப் படிக்கிறான்?" என்று கேட்டபோது தாங்கள் மகாதேவன் யார் என்று புரிந்து கொள்ளாமல், திருதிரு என்று விழிக்கவில்லையா? பிறகு, அவர் தன் பிள்ளையைச் சுட்டிக் காட்டிக் கேட்டபோது, "ஓ! வழுக்கைத் தலையின் தகப்பனாரா நீங்கள்!" என்று உங்களை யறியாமலேயே சொல்லவில்லையா? வழுக்கைத் தலையின் தகப்பனார் இதைக் கேட்டுக் கோபம் கொண்டு உம்மை அடிக்க வர, ஹெட் மாஸ்டர் வந்து மத்தியஸ்தம் செய்யவில்லையா?

★ ஆக, இத்தனை ரகளைக்குக் காரணமான அந்த கணபதி சுப்ரமண்ய அய்யருக்கு நாங்களும் ஒரு பெயர் வைத்திருந்தோம். அவர் தினம் ஷோக்காக மாமனார் வீட்டுக்குச் செல்லும் மாப்பிள்ளையைப் போல் உடை உடுத்திக்கொண்டு வருவதைப் பார்த்து விட்டு, "ஷோக்கு மாப்பிள்ளை" என்று பெயர் வைத்து விட்டோம்.

ஆனால் நாங்கள் அவருக்கு என்ன பெயர் வைத்து என்ன? அவர் எங்களுக்கு வைத்த பெயர் தான் நிலைத்து விட்டது. அதைச் சொன்னால்தான் உங்களுக்கு என்னை யார் என்று புரிந்து கொள்ள முடியும்போல் தோன்றுகிறது .... சொல்லுவதற்குச் சற்று வெட்கமாகத் தான் இருக்கிறது. இருந்தாலும் என்ன பண்ணுகிறது? சொல்லுகிறேன் .... **தலை விரிச்சான்!**

.... ஆ! இப்பொழுது ஞாபகம் வந்ததா? "அட பாவி! நீயா? நீயா என்னைப் பார்த்து விடாக் கண்டர் என்று சொல்லுகிறாய்!" என்றுதானே கேட்கிறீர்கள்?

பின் நீர் செய்கிற காரியத்துக்கு உம்மை விடாக்கண்டர் என்று சொல்லி அழைக்காமல் வேறு என்ன சொல்லி அழைக்கிறது என்று கேட்கிறேன்!

★ நாற்பது வருஷத்துக்கு முந்தி, நான் மூன்றாவது வகுப்பில் உம்மிடம் கணக்குப் பாடம் கற்றுக் கொண்டிருந்தபொழுது, எனக்கு ஒரு கணக்குப் போட்டீரே, ஞாபகம் இருக்கிறதா? **காலே அரைக்கால் காசுக்கு நாலே யரைக்கால் வாழைக்காய் என்றால் காசுக்கு எத்தனை வாழைக்காய்?** ... இதுதான் நீர் எனக்குப் போட்ட கணக்கு. இந்தக் கணக்குப் போடத் தெரியவில்லை என்பதற்காக என்னை எத்தனை அடி அடித்திருப்பீர்? எத்தனை மணி நேரம் பெஞ்சு மீது நிறுத்தி வைத்திருப்பீர்! இருந்தும் உமக்குத் திருப்தி ஏற்படவில்லை என்றே தோன்றுகிறது.

இந்தக் கணக்குக்கு விடை என்னிடமிருந்து எப்படியாவது கிரகித்து விடுவது என்று தீர்மானித்து விட்டீர் என்றே படுகிறது. வயது ஏற, ஏறவாவது எனக்கு இந்தக் கணக்குப் போடத் தெரிகிறதா என்று பார்த்து விடக் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டீர் என்றே தெரிகிறது.

நான் மூன்றாவது வகுப்பை விட்ட ஐந்து வருஷம் கழிந்து, அதே மூன்றாவது வகுப்பில் என் தம்பி உங்களிடம் கணக்குப் பாடம் கற்றுக் கொண்டான். அவனுக்கும் இதே கணக்கைப் போட்டு, அவன் போடத் தெரியாமல் விழிக்க, "வீட்டில் கேட்டுப் போட்டுக்கொண்டு வா" என்று சொல்லி அனுப்பி விட்டீர்.



★ அவன் உடனே என்னைத்தான் வந்து கேட்டான். கணக்கைப் பார்த்ததுமே இது தங்கள் சூழ்ச்சிதான் என்று தெரிந்து கொண்டு விட்டேன். அதற்காகவே எப்படியாவது கணக்கைச் சரியாகப் போட்டுத் தங்களிடம் நல்ல பெயர் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று பார்த்தேன். ஆனால் கணக்குப் போடத் தெரிந்தால் தானே! தெரியவில்லை.

அதுதான் தெரியவில்லை என்று சொல்கிறானே என்று நீர் என்னைச் சும்மா விட்டு விடக் கூடாதோ? இல்லை. இன்னும் இரண்டு வருஷம் கழித்துத் தங்களிடம்

நவம்பர் பத்தாந் தேதி

"பகீரதன்"

அன்று கடற்கரையில் கூடியிருந்த ஜன சமுத்திரத்தைப் பார்க்கும்போது, சென்னை நகரின் ஒவ்வொரு வீடும் காலியாய்க் கிடக்கும் போலிருந்தது. அங்கங்கே ஒலி பெருக்கிக் கருவிகள் அமைக்கப்பட்டிருந்தன. தலைவர் ஆகஸ்ட் அறிக்கையைப் பற்றி வெளுத்துக் கட்டிக் கொண்டு இருந்தார்.



நடு நடுவே எழுந்த கரகோஷம் காதைப் பிளந்தது. இந்தச் சமயத்தில், "அது கிடக்கட்டும்; அந்த நவம்பர் பத்தாந் தேதி அறிக்கையைப் பற்றி என்ன சொல்லுகிறீர்?" என்று ஒரு குரல் கூட்டத்தின் மத்தியிலிருந்து கேட்டது. தலைவரின் உணர்ச்சி ததும்பும் பேச்சில் ஈடுபட்டிருந்த ஜனங்கள், "ஏய், யாரது? உட்காரு, உட்காரு!" என்று இரைந்தனர்.

ஆனால் அந்த ஆசாமி விடவில்லை. நடு நடுவே எழுந்து நவம்பர் பத்தாந் தேதியைப் பற்றிக் கேட்டுக்கொண்டேயிருந்தார். பக்கத்திலிருந்த ஜனங்களுக்கு அந்த மனிதருடைய தொந்தரவைத் தாங்க முடியவில்லை. "ஏய், உட்காரு. நிற்காதே!" என்று பல இடங்களிலிருந்தும் அவரைத் தாக்க ஆரம்பித்து விட்டனர். மனிதர் உட்கார்ந்தால்தானே?

"நாம் எல்லாரும் ஒற்றுமையாயிருந்தால்......" என்று தலைவர் பழைய பாகவதத்தை ஆரம்பித்தார். அதை லட்சியம் செய்யாத அந்த ஆசாமி, "நவம்பர் பத்தாந் தேதி அறிக்கை என்ன ஆயிற்று?" என்று கனத்த குரலில் கேட்டார்.

கூட்டத்தின் அமைதியைக் காத்து வந்த தொண்டர்களுக்கு அந்த மனிதரின் அதிகப் பிரசங்கத்தைத் தாங்க முடியவில்லை. அவர்களில் சிலர் அவரை நெருங்கி, தண்டுக் கட்டாகத் தூக்கிக் கூட்டத்துக்கு வெளியே கொண்டு வந்தனர்.

அந்த ஆசாமி வெளியே வந்ததும், "அப்பாடா" என்று தம்மைத் தாமே ஆசுவாசப் படுத்திக்கொண்டார். தொண்டர்கள், அவரைப் பார்த்து, "எதற்காக ஐயா இவ்வளவு நல்ல கூட்டத்தைக் கலைக்க முயன்றீர்? நவம்பர் பத்தாந் தேதியாவது, அறிக்கையாவது? உமக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா, என்ன?" என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த மனிதர், "எனக்கு ஒன்றும் பைத்தியமில்லை. இன்றிரவு பத்து மணி வண்டியில் ஊருக்குப் போக வேண்டும். கூட்டத்தின் மத்தியில் சிக்கிக் கொண்டேன். வெளியே வருவதற்கு வழி தெரியவில்லை. அதற்காகத்தான் அப்படி கலாட்டா செய்தேன்!" என்று சொல்லிக் கொண்டே ரயிலடியை நோக்கி ஓட்டமெடுத்தார்!

டைகர் எங்கே?

"லோமாஸ்"

ராவ் சாகிப் ராமசாமிப் பிள்ளைக்கு அன்று ஒரு வேலையும் ஓடவில்லை. சதாகாலமும் அவரை விட்டுப் பிரியாத டைகர் காணாமற் போனதுதான் காரணம்.

ராவ் சாகிப் வெளியே கிளம்பினால் 'டைகர்'தான் முதலில் காரில் ஏறிக் கொள்ளும். சாப்பிடும்பொழுது கூட அதற்குத்தான் முதல் பந்தி. இப்படியிருந்த 'டைகர்' காணாமற் போகவே, அவர் பத்திரிகையில் விளம்பரம் செய்தார்:

"உயர்ந்த ஜாதி இராஜபாளையம் நாய்; இரண்டடி உயரம். 'டைகர்' என்னும் பெயருள்ளது. காணாமற் போய் விட்டது. அதைக் கண்டு பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஐம்பது ரூபாய் பரிசு கொடுக்கப்படும். நாயின் சொந்தக்காரர் ராவ் பகதூர் ராமசாமிப் பிள்ளை. 'டைகர்' கிடைத்தாலும் சரி, அல்லது அதைப்பற்றி ஏதாவது துப்புக் கிடைத்தாலும் சரி "புரளி உலகம்" காரியாலயத்துக்கு அறிவிக்க வேண்டுகிறேன்."

விளம்பரம் செய்து பதினைந்து நாட்கள் கழிந்தும் டைகரைப் பற்றிய சமாசாரம் ஒன்றும் தெரியவில்லை. ராவ் சாகிப் அவர்களுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. பதினாறாவது நாள், டைகரைப் பற்றி விசாரிக்கப் பத்திரிகை ஆபீஸுக்குச் சென்றார்.

ஆபீஸ் பையனைப் பார்த்து, "விளம்பர மானேஜரைப் பார்க்க வேண்டும்" என்றார் ராவ் சாகிப்.

"அவர் வெளியே போயிருக்கிறார்."

"விளம்பர இலாகாவைச் சேர்ந்தவர் யாரும் இல்லையா?"

"வெளியே போயிருக்கிறார்கள்!"

"ஆசிரியரைப் பார்க்க முடியுமா?"

"ஆசிரியரும் வெளியே போயிருக்கிறார்?"

"உதவி ஆசிரியரைப் பார்க்கலாமா?"

"அவரும் இல்லீங்களே!"

"ஆசிரியர் இலாகாவில் ஒருவருமே இல்லையா? யாருமே வரவில்லையா?"

"எல்லாரும் வந்திருந்தாங்க!"

ராவ் சாகிப்புக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "ஆபீஸுக்கு வந்து விட்டு எல்லாருமா போய் விட்டார்கள்? ஆபீஸ் குமாஸ்தாக்கள் யாராவது இருக்கிறார்களா?"

"ஆபீஸிலே யாருமே இல்லீங்க ஸார்! எல்லாரும் வெளியே போயிருக்காங்க!"

"அப்படி எல்லாரும் வெளியே போகும்படியாக முக்கியமான வேலை என்ன?"

"யாரோ பெரிய மனுஷர் ராவ் சாகிப் ஐயாவாம். அவுங்களோட நாய் டைகரைக் காணோமாம். அதைக் கண்டு பிடிக்கிறவங்களுக்கு ஐம்பது ரூபாய் இனாம் தருவதாகப் பேப்பர்லே போட்டிருந்தாங்களே! அதைத்தான் எல்லோரும் தேடிக்கிட்டுப் போயிருக்காங்க!" என்று ஆபீஸ் பையன் சொன்னான்!





ஆனந்தமாக லிப்டன் தேனீர் அருந்தும்போது பொறுப்பற்ற பேச்சுகளைப் பேசாதீர்கள்.



வெடி குண்டுகள் விழுந்தால் நீங்கள் என்ன செய்ய விரும்புவீர்கள்? லண்டனில் பிரபல வைத்தியராயிருந்த பிரக்யாதமான டாக்டர் அக்சேல் மென்தே சொல்வதைக் கேளுங்கள்: "வெடிகுண்டுகள் வீசப்பட்ட இடங்களிலிருந்து தப்புவிக்கப்பட்டதுமே, ஜனங்கள் முதலில் கேட்பது ஒரு கோப்பை தேநீர்தான். அது அவர்களுக்கு சந்தோஷம் தருவதுமன்றி, அவர்களுடைய பயத்தை போக்கி நன்னம்பிக்கையை ஊட்டவும் உதவுகிறது. ஆபத்திலிருந்து விடுவிக்கும் படையினர் அவ்வேறு நாள் இடிந்து விழுந்த ஒரு சிறு வீட்டின் படிவழியே விரைந்தனர். ஒரு கிழவி, கூரை முழுதும் அநேகமாக மார்பிலே விழுந்து கிடக்கப் படுக்கையில் படுத்திருந்தாள். அவர்கள் அவளை விடுவித்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயினர். காயமடைந்த பகுதியில் அவள் 'ஸ்டிரெச்சரில்' கிடக்கும்போது, அவளுக்கு ஒரு கோப்பை தேநீர் கொடுத்தார்கள். அவள் அதை அருந்திய பிறகு முதல் தடவையாய்ப் பேசினாள்."



ஒவ்வொரு போர் முனையிலிருந்தும்—எந்தெந்த இடத்தில் மனுஷனின் தைரியம், பொறுமை இவைகளின் விசேஷத்தை அவசரமாகக் கோருகிறதோ—அவ்விடமிருந்தெல்லாம் ஐக்கிய நாடுகளின் போர் வீரர்களுக்கு டீ அளிக்கும் விசேஷ குணங்களைப்பற்றிய செய்திகள் வருகின்றன. யுத்தத்திலும் சரி, சமாதானகாலங்களிலும் சரி, டீ [illegible] கெடுதல் இல்லாத சௌகரியமளிக்கும் பானம் என்பதை நிரூபிக்கிறது.

கடினமான காலங்களில்
இந்தியன் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 223



காலக்ஷேபம்

நல்ல யோசனை

தாயார்:—டேய்! அங்கே என்னடா இருட்டில் சுவரைத் தடவிக் கொண்டிருக்கிறாய்?

மகன்:—'ஸ்விச்சை'த் தேடுகிறேனம்மா!

தாயார்:—போடா, முட்டாள்! விளக்கைப் போட்டுக்கொண்டு தேடேன்!

—"விசு"

●

யாருக்கு மருந்து?

டாக்டர்:—உங்கள் கணவர் நன்றாக இளைப்பாற வேண்டும். இதோ, நன்றாய்த் தூக்கம் வருவதற்கு மருந்து கொடுத்திருக்கிறேன்......

மனைவி:—எப்பொழுதெல்லாம் அவருக்கு இந்த மருந்தைக் கொடுக்க வேண்டும்?

டாக்டர்:—இந்த மருந்து அவருக்கல்ல; உங்களுக்குத்தான்!

—சி. ஆர். சீதாராமன்.

●

மிருகமா, மனிதனா?

மிருக வைத்தியர் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். அவரை அவமானப் படுத்த எண்ணி, கூட்டத்திலிருந்த ஒருவர், "நீர் மிருக வைத்தியர்தானே?" என்று கேட்டார்.

"ஆம், உமக்கு என்ன வியாதி?" என்று திருப்பிக் கேட்டார் மிருக வைத்தியர். —ஆர். ராஜேஸ்வரி.

●

போகாது!

பாதசாரி:—இந்த இருப்புப் பாதை எங்கேயப்பா போகிறது?

கிராம வாசி:— அது எங்கேயும் போகாமல் இருப்பதற்குத்தான் இரண்டு பக்கமும் ஆணி அடிச்சிருக்குங்களே!

—எஸ். டி. குப்புசாமி.

வேண்டாத காரணம்

ஒரு நாள் மாலை, விச்சுவை அழைத்துக் கொண்டு அவன் தாயார் கடைத் தெருவுக்குப் போனாள். அங்கு குழந்தை கண்ட பொருள்களெல்லாம் வேண்டுமென்று பிடிவாதம் செய்தான். அவளும் எல்லாவற்றையும் பொறுமையுடன் வாங்கிக் கொடுத்து வந்தாள். கடைசியில் ஒரு சமயம் அவளும் சலிப்படைந்தவளாய் "ஏது, ஆகாயத்தில் உள்ள சந்திரன் கூட வேண்டும் என்று கேட்பாய் போலிருக்கிறதே" என்று கேட்டாள்.

விச்சு (ஆகாயத்தில் தோன்றியிருந்த பிறையைப் பார்த்துவிட்டு):—ஊஹூம்; அது எனக்கு வேண்டாம்; ஒடைஞ்சிருக்கு!

—வி. எஸ். கிருஷ்ணசாமி ராவ்.

●

ரொம்ப அடக்கம்

வீட்டுச் சொந்தக்காரர்:—நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சத்தம் போடாமல் அடக்கமாக இருப்பீர்களா?



வீடு பார்க்க வந்தவர்:—என்ன அப்படிக் கேட்கிறீர்களே! நாங்கள் வீட்டுக்கு வருவதும் தெரியாது, வீட்டை விட்டுப் போவதும் தெரியாது!

—கே. ஆர். கல்யாணராமன்.

வந்த படகுகளும், கால்வாய்க்கு அப்பால் மரங்களின் வழியாக வெகு தூரத்துக்குத் தெரிந்த பசுமையான சமவெளியும் மனோகரமான காட்சி யளித்தன. கால்வாய் நீரில் ஆங் காங்கு மரங்களின் கருநிழல் படிந் திருந்த இடங்கள் கண்களைக் குளிரச் செய்தன. சற்றுப் பின்னால் வந்த படகுகளில் ஒன்றிலிருந்து படகுக் காரன் ஒருவன் பாடிய கீதம் காற் றிலே மிதந்து வந்தது.

இத்தகைய சாந்தமும் இன்பமும் அமைதியும் அழகும் குடிகொண்ட காட்சியைக் குலைத்துக் கொண்டும், "இது பொய் அமைதி; சீக்கிரத்திலே இடியும் மழையும் புயலும் பூகம்பமும் வரப் போகின்றன!" என்று மௌனப் பறையறைந்து தெரிவித்துக் கொண் டும், கால்வாயில் தானிய மேற்றிய படகுகளுக்கு நடுவில் ஆயுதம் ஏற்றிய படகு ஒன்று வந்து கொண்டிருந்தது. அதில் வேல், வாள், ஈட்டி, கத்தி, கேடயம் முதலிய வித விதமான போர்க் கருவிகள் நிறைந்திருந்தன.

அதுவரையில் மௌனமாக அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண் டிருந்த சக்கரவர்த்தி இந்த ஆயுதப் படகைக் கண்டதும் "ஆ! பல்லவ ராஜ்யத்தில் யுத்த ஆயத்தங்கள் பல மாகத்தான் நடக்கின்றன!" என்று பரிகாசமும் மனக்கசப்பும் தொனித்த குரலில் கூறி விட்டு, பக்கத்தில் குதிரை மேலிருந்த தம் குமாரரைப் பார்த்தார். பார்த்தவுடன் தாம் சொல்ல வந்ததை நிறுத்திக்கொண்டு, "நரசிம்மா! ஏதோ கேட்க விரும்பு கிறாய் போலிருக்கிறதே!" என்றார்.

"எப்படித் தெரிந்தது, அப்பா!" என்றார் குமார சக்கரவர்த்தி.

"உன் முகம் தெரிவிக்கிறது, நரசிம்மா! அபிநயம், முக பாவம் ஆகியவைகளைப் பற்றி இப்போது தானே பேசிவிட்டு வந்தோம்?—கேட்க விரும்பியதைக் கேட்டுவிடு!" என்றார் தந்தை.

"சத்ருக்னனை எங்கே அனுப்பி னீர்கள், அப்பா!"

"ஆயனர் வீட்டுக்கு?"

"எதற்காக?"

"ஒற்றனை வேறு எதற்காக அனுப் புவது? வேவு பார்ப்பதற்குத்தான்!"

"என்ன அப்பா, சொல்கிறீர்கள்? ஆயனச் சிற்பியின் வீட்டை வேவு பார்க்கும்படியான அவசியம் என்ன?"

"யுத்த காலத்தில் சர்வ ஜாக்கிரதை யாயிருக்கவேண்டும், குழந்தாய்! இம் மாதிரி சமயங்களில், துறவியின் காவித் துணியில் எதிரியின் ஒற்றன் ஒளிந் திருக்கலாம். சிற்பக் கலைக்குள்ளே சதியாலோசனை இருக்கலாம்....."

நரசிம்மர் தம்மை மீறிய பதைபதைப் புடன், "ஆகா! இதுஎன்ன? ஆயனச் சிற்பியா நமக்கு எதிராகச் சதி செய் கிறார்? என்னால் நம்ப முடிய வில்லையே!" என்றார்.

"யார் சொன்னது, நரசிம்மா! ஆயனச் சிற்பி சதி செய்வதாக நான் சொல்லவில்லையே? அந்தப் பரம சாது நமக்காக உயிரையே விடக் கூடியவராயிற்றே?"

மாமல்லர் சிறிது சாந்தம் அடைந்து "அப்படியானால் ஆயனர் வீட்டுக்கு ஒற்றன் காவல் எதற்காக?" என்று கேட்டார்.

"சாது ஆயனருக்குத் தெரியாமல் அவர் வீட்டில் பகைவர்களின் ஒற் றர்கள் இருக்கலாமல்லவா?"

"ஆயனர் வீட்டில் ஒற்றர்களா? எங்கே இருந்தார்கள்? தங்களுக்கு எப்படித் தெரிந்தது? நான் ஒருவரை யும் பார்க்க வில்லையே?"

"குழந்தாய்! இராஜ்ய நிர்வாகத் தில் ஈடுபட்டவர்களுக்கு எப்போதும் கண்ணும் காதும் திறந்திருக்க வேண் டும். முக்கியமாக, யுத்த காலத்தில் இது மிகவும் அவசியம். ஆயனர் வீட் டில் இருந்தபோது உன் கண்கள் என்ன செய்து கொண்டிருந்தன?" என்று கேட்ட வண்ணம் சக்கரவர்த்தி நரசிம்மரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

ஆயனர் வீட்டிலிருந்தபோது தம் கண்கள் சிவகாமியின் கண்களுடன் பேசுவதிலேயே பெரிதும் ஈடுபட் டிருந்தன என்பது ஞாபகம் வரவே, நரசிம்மருடைய பால் வடியும் இளம் வதனம் வெட்கத்தினால் சிவந்தது.

வேண்டுமென்று அவர் எண்ணினார். ஆனால், மகேந்திரரோ அந்தக் காட்டு வழியில் அதிவேகமாகக் குதிரையை நாலுகால்ப் பாய்ச்சலில் விட்டுக் கொண்டு போனார். சக்கரவர்த்தி குதிரையை விரைவாக விட்டுக் கொண்டு போனால், அவர் ஏதோ வெகு முக்கியமான விஷயத்தைப் பற்றிச் சிந்தனை செய்கிறார் என்பதை மாமல்லர் அறிந்தவரான படியால், விஷயத்தைத் தெரிந்து கொள்ள அவருடைய ஆவல் இன்னும் அதிகமேயாயிற்று. அவருடைய குதிரையும் நாலுகால்ப் பாய்ச்சலில் சென்றது.

காட்டைத் தாண்டியதும், காஞ்சியிலிருந்து மாமல்லபுரத்துக்குப் போகும் இராஜ பாட்டை தென்பட்டது. அந்தச் சாலையோரமாக ஒரு பெரிய கால்வாய் காணப்பட்டது. கால்வாயில் ஒன்றன் பின் ஒன்றாகப் படகுகள் காஞ்சியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. படகுகளில் பெரும்பாலும் தானிய மூட்டைகள் ஏற்றியிருந்தன. ஒவ்வொரு படகையும் இரண்டு ஆட்கள் தள்ளிக் கொண்டு வந்தார்கள்.

இரு புறத்திலும் மரமடர்ந்த விசாலமான சாலையும், தெளிந்த நீரையுடைய கால்வாயும், கால்வாயில் மிதந்து



டால், உடனே வந்து எனக்குத் தெரிவிக்க வேண்டும்.''

இவ்விதம் கூறிவிட்டுச் சக்கரவர்த்தி மீண்டும் குதிரையை வேகமாக விட்டார். அவரைத் தொடர்ந்து குமார சக்கரவர்த்தியும் குதிரையை வேகமாகச் செலுத்த, மற்றப் பரிவாரங்கள் அவர்களைப் பின் தொடர முடியாமல் பின் தங்கும்படி நேர்ந்தது.

சக்கரவர்த்திக்கும் சத்ருக்னனுக்கும் நடந்த சம்பாஷணை அரை குறையாக நரசிம்மரின் செவியில் விழுந்தது. அது அவருடைய மனதில் பெருங் குழப்பத்தை உண்டாக்கிற்று. சிவகாமி கூறியபடி ஆயனரின் வீட்டில் வேலெறிந்த வாலிபனைக் காணாதது மாமல்லருக்கு ஏற்கெனவே வியப்பை உண்டாக்கியிருந்தது. இப்போது சக்கரவர்த்தி ஆயனர் வீட்டைக் காவல் புரியும்படி பல்லவ ராஜ்யத்தின் மகா சமர்த்தனை ஒற்றனை ஏவியது மாமல்லரின் வியப்பைப் பன்மடங்கு அதிகமாக்கியதுடன், அவருடைய மனத்தில் என்னவெல்லாமோ சந்தேகங்களைக் கிளப்புவதற்கு ஏதுவாயிற்று. அதைப் பற்றித் தந்தையைக் கேட்க



விருந்து போய்விட்ட அநேக ஜைன முனிவர்களைப்போல் அவரும் போய் விட்டார்! மேற்கூறிய அறியாத வர்ணச் சேர்க்கையின் இரகசியத்தை அறிந்து கொள்வதில் ஆயனருக்கு அன்று ஏற்பட்ட ஆவல் இன்று வரையில் வளர்ந்துகொண்டே இருந்த தல்லாமல், குறையும் வழியாக இல்லை.

* * *

மேற்படி வரலாற்றைக் கேட்டுக் கொண்டிருந்த புத்த பிக்ஷு, முடிவில், "ஆயனரே! கவலை வேண்டாம்! உங்களுடைய ஆவல் நிறைவேறும் காலம் நெருங்கி விட்டது. பரஞ்சோதிக்கு நீங்கள் குதிரையும் பிரயாண இலச்சினையும் வாங்கிக் கொடுப்பதுதான் தாமதம். வெகு சீக்கிரத்தில் உங்கள் மனோரதம் நிறைவேறும்!" என்றார்.

ஆயனர் கூறிவந்ததைக் கேட்டு அதிசயித்துக் கொண்டிருந்த பரஞ்சோதியும், மிக்க உற்சாகத்துடன், "ஆம், ஐயா! தங்களுடைய மனோரதம் என்னால் நிறைவேறுவதா யிருந்தால் அது என்னுடைய பாக்கியந் தான். என்ன அபாயம் வந்தாலும் பின்வாங்காமல் காரியத்தை முடித்துக் கொண்டுவரச் சித்தமா யிருக்கிறேன்" என்றான்.

சிவகாமியின் உள்ளத்திலோ முரண்பட்ட எண்ணங்கள் தோன்றிப் போட்டியிட்டன. ஆயனருடைய ஆவலையும், அது நிறைவேறினால் அவர் அடையக்கூடிய மகத்தான ஆனந்தத்தையும் அவள் அறிந்துதா னிருந்தாள். ஆனாலும், புத்த பிக்ஷுவின் தூண்டுதலால் நடக்கும் இந்தக் காரியத்தில் ஏதாவது சூதும், சூழ்ச்சியும் இருக்குமோ என்று அவள் மனம் ஐயுற்றது. அப்பாவிடம் தனது ஐயத்தைப் பற்றிச் சொல்வதில் யாதொரு பயனும் இல்லை. ஆகவே, பரஞ்சோதியைத் தனியாகப் பார்த்து எச்சரிக்க வேண்டுமென்று அவள் தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

சத்ருக்னன்

ஆயனர் வீட்டிலிருந்து புறப்பட்ட மகேந்திர பல்லவர் குதிரையை விரைவாகச் செலுத்திக் கொண்டு சென்று சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருந்த தமது பரிவாரங்களை அடைந்தார். அங்கே குதிரையைச் சற்று நிறுத்தி, கூட்டத்தில் ஒருவன் மீது தம் பார்வையைச் செலுத்தினார். அந்த மனிதன் சக்கரவர்த்தியின் பார்வையில் இருந்த சமிக்ஞையைத் தெரிந்து கொண்டவனாய், அவரை நெருங்கி வந்து, "கட்டளை என்ன?" என்று கேட்பவனைப்போல் பணிவாக நின்றான்.

"சத்ருக்னா! உனக்குச் சிற்பக் கலையில் பயிற்சி உண்டா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

சத்ருக்னன் முகத்தில் எவ்வித உணர்ச்சியும் காட்டாமல் "இல்லை, பிரபு!" என்றான்.

"இவ்வளவுதானா? சிற்பக் கலையில் கொஞ்சமாவது உனக்குப் பயிற்சி இருக்க வேண்டும்."

"இப்போதே தொடங்குகிறேன்."

"அதற்கு இந்த இடத்தைக் காட்டிலும் நல்ல இடம் கிடையாது."

"தெரியும், பிரபோ!"

"ஆயனருடைய சீடப் பிள்ளைகள் செய்யும் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாலே போதும்."

"ஆம், பிரபோ!"

"உன்னைப்போல் சிற்பம் கற்றுக் கொள்ளப் புதிதாக வேறு யாராவது இங்கே வந்திருந்தால், அவர்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும்."

"அப்படியே!" என்று சத்ருக்னன் கூறியபோது அவனுடைய புருவங்கள் சிறிது மேலே சென்றன.

"அவர்கள் உன்னைக் கவனிக்க வேண்டியதில்லை."

"அவசியமே இல்லை."

"நல்லது; சிற்பக் கலையைப்பற்றிப் புதிதாக ஏதேனும் தெரிந்து கொண்

"பார்த்தேன்; இரண்டு அப்ஸர ஸ்திரீகளின் திவ்ய வடிவங்களை பரத சாஸ்திரத்தில் சொல்லிய இரண்டு அபூர்வ அபிநயத் தோற்றங்களில் பார்த்தேன். அவற்றை எழுதிய மகா சைத்திரிகர் யாரோ என்று அதிசயித்தேன்......"

"யார் என்று தெரிகிறதா, சுவாமி?"

"இப்போது தெரிகிறது. அப்பேர்ப் பட்ட தத்ரூபமான ஜீவ வடிவங்களை எழுதக்கூடிய மகா சைத்திரிகர் தென் னாட்டிலே ஆயனச் சிற்பியைத் தவிர வேறு யார்?"

"ஆம்; அடிகளே! அந்த உருவங்களை எழுதியவன் அடியேன்தான். இன்னும் ஏதாவது அதிசயத்தைக் கவனித்தீர்களா? அந்தச் சித்திர உருவங்கள் சிரம் முதல் பாதம்வரையில் பூரணமாய்ப் பொலிகின்றனவா?"

"இல்லை; இடைக்கு மேலே பிரகாசமாய் நேற்று எழுதியவைபோல் விளங்குகின்றன. இடைக்குக் கீழே வர்ணம் மங்கி விளக்கமின்றி இருக்கின்றன."

"ஆ! இந்த ஒன்பது வருஷங்களில் அதிகமாக மங்கித்தானிருக்கும்!' என்றார் ஆயனர். பின்னர், மேற் சொன்ன சித்தர்மலைச் சித்திரங்களைக் குறித்து ஆயனர் முன்னும் பின்னுமாகத் தட்டுத் தடுமாறிக் கூறிய வரலாறு இதுதான் :—

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், மகேந்திர சக்ரவர்த்தி சமண சமயத்தினராயிருந்த காலத்தில், சோழ மண்டலத்துக்கு அவர் பிரயாணம் சென்றபோது ஆயனரையும் கூட அழைத்துப் போயிருந்தார். உறையூரில் சோழ மன்னனுடைய உபசாரங்களைப் பெற்றுக் கொண்டு, அங்கிருந்து சித்தர்வாச மலையில் சமண முனிவர்கள் ஏற்படுத்தியிருந்த பிரசித்திபெற்ற ஜீனப் பள்ளியைப் பார்க்கச் சென்றார். அந்த குகைப் பள்ளியில் தீட்டப்பட்டிருந்த சிறந்த வர்ண சித்திரங்களைக் கண்டு சக்கரவர்த்தியும் ஆயனரும் அதிசயித்தார்கள். உண்மையில், மேற்படி சித்திரங்களைப் பற்றிக் கேள்விப்பட்டு அவற்றை ஆயனருக்கும் காட்டுவதற்காகத்தான் அவரை மகேந்திர பல்லவர் கூட அழைத்துச் சென்றது.

சித்தர் மலைப் பள்ளியில் மேற்படி ஓவியங்களைத் தீட்டிய ஜீன முனிவர் அச்சமயம் அங்கே வாசம் செய்து கொண்டிருந்தார். அந்தச் சித்திரங்கள் ஆயிரம் வருஷம் ஆனாலும் அழியாதவை என்று அம்முனிவர் கூறியதைச் சக்கரவர்த்தியும் ஆயனரும் நம்பவில்லை. அஜந்தா சித்திரங்களைப் பற்றி அந்த முனிவர் கூறியதையும் இவர்கள் நம்பவில்லை. அதன்பேரில் அந்த ஜீன முனிவர் ஒரு பந்தயம் போட்டார். அந்த ஜீனக் கோயிலின் வாசலில் ஆயனர் இரண்டு அப்ஸர மாதரின் நடனத் தோற்றங்களை எழுத வேண்டுமென்றும், மேற்பாதி உருவங்களைத் தாம் குழைத்துக் கொடுக்கும் வர்ணங்களைக் கொண்டும், இடைக்குக் கீழே ஆயனரின் சொந்த வர்ணங்களைக் கொண்டும் எழுத வேண்டுமென்றும், மூன்று வருஷம் கழித்து மீண்டும் வந்து பார்த்து, தாம் கூறுவது உண்மையென்று நிச்சயப் பட்டால், ஆயனர் ஜைன மதத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் முனிவர் பந்தயத்துக்கு நிபந்தனை விதித்தார். அவ்விதம் செய்தால் மேற்படி வர்ணச் சேர்க்கையின் இரகசியத்தைச் சொல்லிக் கொடுப்பதாகவும் கூறினார். அந்த நிபந்தனையை ஒப்புக் கொண்டு ஆயனர் மேற்படி அப்ஸர மாதர்களின் சித்திரங்களை எழுதினார். அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள்ளே மகேந்திர சக்கரவர்த்தி திருநாவுக் கரசரால் ஆட்கொள்ளப்பட்டுச் சைவ சமயத்தைத் தழுவினார். ஆனாலும், இரண்டு பேரும் சித்தர் மலைக்கு மறுபடியும் சென்றார்கள். அங்கே போய்ப் பார்த்தபோது, ஆயனர் தீட்டிய அப்ஸர மாதரின் நடன உருவங்களின் மேற்பகுதிகள் அன்று எழுதியவைபோல் வர்ணம் மங்காமல் விளங்கின. கீழ்ப் பகுதிகள் பெரிதும் மங்கிப் போயிருந்தன. இதனால் அளவிலாத அதிசயமடைந்த ஆயனர், நிபந்தனைப்படி ஜைன மதத்தைத் தழுவி, மேற்படி அழியாத வர்ணச் சேர்க்கையின் இரகசியத்தை அறிந்து கொள்ளச் சித்தமாயிருந்தார். ஆனால், நிபந்தனை விதித்த ஜைன சைத்திரிகர் அப்போது அங்கு இல்லை! சக்கரவர்த்தி சைவரானதுபற்றிக் கோபங் கொண்டு, பல்லவ சாம்ராஜ்யத்தி

நாகார்ஜுன பர்வதத்துக்கு இவனை அனுப்புகிறேன், அம்மா!''

"நீங்களா அனுப்புகிறீர்கள்? இந்த அடிகள் அனுப்ப வில்லையா? எதற்காக, அப்பா!''

"நான்தான் அனுப்புகிறேன், குழந்தாய்! மிகவும் முக்கியமான காரியத்துக்காக. சென்ற ஒன்பது வருஷ காலமாய் இரவும் பகலும் நான் கனவு கண்டுகொண்டிருந்த காரியத்துக்காக. அந்தக் கனவு நிறைவேறப் போகிறது. சிவகாமி! இந்த உத்தம புத்த பிக்ஷுவின் உதவியினால் நிறைவேறப் போகிறது'' என்று ஆயனர் கூறிய போது, அவருடைய மொழிகளில் பழையபடி ஆர்வமும் பரபரப்பும் பொங்கித் ததும்பின.

"என்ன அப்பா சொல்கிறீர்கள்? நீங்கள் என்ன கனவு கண்டீர்கள்? அது எப்படி நிறைவேறப் போகிறது? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே?'' என்றாள் சிவகாமி.

"இதோ சொல்கிறேன், அம்மா! அஜந்தா மலைக் குகையிலுள்ள அதிசய வர்ண சித்திரங்களைப் பற்றி உனக்குப் பல தடவை சொல்லி யிருக்கிறேன் அல்லவா? ஐந்நூறு வருஷத்துக்கு முன்னால் எழுதிய சித்திரங்கள் இன்று வரையில் அழியாதிருக்கும் ஆச்சரியத்தைப் பற்றிச் சொல்லி யிருக்கிறேன் அல்லவா? அந்த வர்ணச் சேர்க்கையின் இரகசியத்தை அறிந்து வருவதற்காகத்தான் இந்தப் பிள்ளையை வடக்கே அனுப்பப் போகிறேன்......''

"ஐந்நூறு வருஷத்து வர்ணமாவது, அழியாதிருக்கவாவது? எனக்கு நம்பிக்கைப் படவில்லை, அப்பா! அதற்காக இவரை அனுப்புவது வீண்வேலை!'' என்று சிவகாமி கூறி, சந்தேகமும் அவநம்பிக்கையும் வெளிப்படையாகத் தோன்ற, பிக்ஷுவை நோக்கினாள்.

புத்த பிக்ஷுவின் கடுகடுத்த முகம் இன்னும் அதிகமாகக் கறுத்தது. அவர் ஏதோ சொல்ல ஆரம்பித்தார். அதற்குள்ளே ஆயனர், "சிவகாமி! அதை நம்புவது கஷ்டந்தான். முதன் முதலில் கேள்விப்பட்ட போது எனக்கும் நம்பிக்கை உண்டாகவில்லை. ஐந்நூறு வருஷம் அழியாத வர்ணம் எப்படி இருக்கமுடியும், இது என்ன அண்டப் புளுகு என்றுதான் எண்ணினேன். நேரில் பார்த்தவர்கள் சொன்னபோது கூட நம்பிக்கை ஏற்படவில்லை. நானே கண்ணால் பார்த்த பிறகுதான் நம்பிக்கை உண்டாயிற்று!'' என்றார்.

ஆயனர் இவ்விதம் கூறியதும் புத்த பிக்ஷுவும் சிவகாமியும் தங்களுடைய வியப்பை ஏககாலத்தில் தெரிவித்துக் கொண்டார்கள்.

"கண்ணால் பார்த்தீர்களா? எப்போது?'' என்றாள் சிவகாமி.

"என்னிடம் இத்தனை காலமும் சொல்லவில்லையே? தாங்கள் அஜந்தாவுக்குப் போனதுண்டா?'' என்று பிக்ஷு கேட்டார்.

"இல்லை; அஜந்தாவுக்குப் போனதில்லை. ஆனால் சித்தர் மலையிலே பார்த்தேன். அடிகளே! தாங்களும் சித்தர் மலைக்குப் போய் வந்ததாகச் சொன்னீர்களே? அங்கே என்னென்ன அதிசயம் கண்டீர்கள்?'' என்று ஆயனர் வினவியதும், பிக்ஷுவின் முகத்தில் பிரகாசம் உண்டாயிற்று.

"ஆ! தெரிகிறது! ... சித்தர் மலைக் குகையில் ஜைன தீர்த்தங்கரர்களின் உருவங்கள் அழியா வர்ணங்கொண்டு எழுதி யிருப்பதைக் கண்டேன்.''

"குகையின் வாசற்புறத்தில் ஏதேனும் அதிசயம் பார்த்தீர்களா?''



......வர்ணம் அழியாமல் விளங்கும் அப்ஸர ஸ்திரீகளின் அபூர்வ நடன சித்திரங்கள்.



சிற்றன்ன வாசல் என்று இக்காலத்தில் வழங்கும் சித்தர்வாச மலைக் குகையில் ......

எவ்வளவு சந்தோஷப் பட்டிருப்பார்கள்? ஒன்று கவனித்தீர்களா? மாமல்லர் கையில் ஒரு வேல் வைத்திருந்தாரே? அது இந்த வீரருடைய வேல்தான்! நான் நன்றாய்க் கவனித்தேன். வேலுக்குப் பிடி மட்டும் புதிதாகப் போட்டிருந்தது ......"

நாகநந்தி மீண்டும் குறுக்கிட்டு, "அதில் என்ன வியப்பு, சிவகாமி? இப்போதுதான் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு ஆயுதம் தேவையாயிருக்கிறதே; ஊரிலுள்ள உடைந்த வேல், வாள், ஈட்டி எல்லாவற்றையும் தேடிச் சேகரிக்கிறார்களே?" என்றார்.

சிவகாமி அவரை எரித்து விடுபவள் போல் பார்த்து விட்டு, "அப்பா! குமார சக்கரவர்த்தி இந்த அண்ணனிடம் திருப்பிக் கொடுப்பதற்காகவே அந்த வேலைத் தம் கையிலேயே வைத்துக் கொண்டிருக்க வேண்டும். சுத்த வீரத்தைப் பாராட்டுவதில் மாமல்லரைப் போல் யார் உண்டு? இவரை நீங்கள் சக்கரவர்த்தியின் சமூகத்துக்கு உடனே அழைத்துப் போக வேண்டும், அப்பா!" என்று கூறிப் பரஞ்சோதியின் மீது கருணை ததும்பிய பார்வையைச் செலுத்தினாள்.

ஆயனர் தட்டுத் தடுமாறி, "ஆகட்டும், அம்மா! என் உத்தேசமும் அதுதான். பரஞ்சோதி வடக்கே போய்த் திரும்பி வந்ததும் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போகிறேன்" என்றார்.

சக்கரவர்த்தி வந்திருந்த சமயத்தில் சிலையின் பின்னால் ஒளிந்திருக்க நேர்ந்த அவமானத்தினாலும், சிவகாமியின் விஷயத்தில் ஏற்பட்ட இயற்கையான சங்கோசத்தினாலும் இத்தனை நேரம் பரஞ்சோதி உள்ளமும் உடலும் குன்றி மௌனமாயிருந்தான். ஆனால், சிவகாமி 'அண்ணன்' என்று உறவு பாராட்டி அவனைக் கருணையோடு பார்த்தவுடன், அவனுடைய ஆன்மாவையும், நாவையும் கட்டியிருந்த தளை அறுந்த மாதிரி இருந்தது. அவன் சிவகாமியை நன்றியுடன் நோக்கிவிட்டு, ஆயனரைப் பார்த்து, "ஐயா! தங்கச்சி சொல்வது உண்மைதான். குமார சக்கரவர்த்தியின் கையிலிருந்த வேல் என்னுடைய வேல் தான் என்று எனக்குக்கூடத் தோன்றியது. அதை வாங்கிக் கொடுத்தீர்களானால் நல்லது. நெடுந்தூரம் பிரயாணம் போவதற்குக் கையில் ஏதேனும் ஆயுதம் அவசியமல்லவா?" என்றான்.

அப்போது புத்த பிக்ஷு, "அழகுதான்! ஆயுதத்துக்குத்தானா இப்போது அவசரம்? வேலும் ஈட்டியும் எத்தனை வேணுமானாலும் நான் சம்பாதித்துத் தருகிறேன். முக்கியமான காரியம் ஆகவில்லையே? குதிரையும் இலச்சினையும் கேட்கத் தவறி விட்டீர்களே, ஆயனரே?" என்றார்.

"அடிகளே! அது என் பொறுப்பு. நாளை மாமல்லபுரத்திற்கு வரும்படி சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார். அங்கே கேட்டு வாங்கி வருகிறேன். பிரயாணத்திற்கு மற்ற ஏற்பாடுகளைக் கவனியுங்கள்" என்றார் ஆயனர்.

"அப்பா! இந்த அண்ணன் நெடுந்தூரம் பிரயாணம் செய்யப் போகிறாரா? எந்த ஊருக்கு, அப்பா!"

"உனக்குத் தெரியாதா? ஓஹோ! முன்னே நாங்கள் பேசிக்கொண்டிருந்த போது நீ இல்லையல்லவா? வடக்கே

சிவகாமியின் சபதம்

கல்கி

இருபத்தோராம் அத்தியாயம்

சித்தர் மலைச் சித்திரம்

பதினைந்து விதமான அபிநயப் பார்வைகளில் சந்தேகமும் அருவருப்பும் தோன்றும் பார்வையைச் சிவகாமி புத்த பிக்ஷுவின் மேல் ஒரு கணம் செலுத்தி விட்டு, ஆயனரைப் பார்த்து, "அப்பா! இவர்கள் இத்தனை நேரமும் இங்கேதான் இருந்தார்களா?" என்று கேட்டாள்.

"ஆம்; குழந்தாய்!"

"இந்த புத்தர் சிலைக்குப் பின்னால் ஒளிந்திருந்தார்களா?"

"ஆமாம், சிவகாமி! ஆனால் நீ என்னமோ ஏதோ என்று நினைக்க வேண்டாம்......"

ஆயனர் மேலே சொல்வதற்குள் சிவகாமி "ஆகா! புத்தபகவானுடைய சிலைகளைப் பிரம்மாண்டமாய்ச் செய்வதில் எவ்வளவு உபயோகம் இருக்கிறது!" என்றாள்.

நாகநந்தி அடிகள், "பார்த்தீரா, ஆயனரே! எனக்கும் உமது குமாரிக்கும் எவ்வளவு மனப் பொருத்தம் இருக்கிறது! அதனால்தான் மஹாயான சித்தாந்தத்தை ஏற்படுத்திய நாகார்ஜுன பிக்ஷுவை நான் போற்றுகிறேன்" என்றார்.

* * *

புத்த மதம் ஸ்தாபிக்கப்பட்டுச் சிலகாலம் வரையில் புத்த பகவானுடைய சிலைகள் அமைப்பதும் சித்திரங்கள் எழுதுவதும் தடுக்கப்பட்டிருந்தன. இந்த வரலாறு நடந்த காலத்துக்கு இருநூறு வருஷத்துக்கு முன்னால், நாகார்ஜுனபிக்ஷு என்னும் மகான் தோன்றி மஹாயான புத்த சித்தாந்தத்தை ஸ்தாபித்தார். பாரத நாட்டின் வட கோடியில் நாலந்தா என்னும் நகரில் பிரசித்தி பெற்று விளங்கிய பௌத்த மடத்தின் தலைவரான நாகார்ஜுன பிக்ஷு தேசமெங்கும் யாத்திரை செய்து, வாதப் போர் நடத்தி, மஹாயான சித்தாந்தத்தைப் பிரசாரம் செய்ததுடன், ஆங்காங்கு பௌத்த மடங்களையும் நிறுவிக் கொண்டு போனார். ஸங்கிராமம் என்ற பெயரால் வழங்கிய அத்தகைய பௌத்த மடம் ஒன்றை அவர் கிருஷ்ணா நதிக் கரையிலுள்ள ஸ்ரீபர்வதத்திலும் ஸ்தாபித்தார். அது முதல் ஸ்ரீபர்வதத்துக்கு நாகார்ஜுன மலை என்ற பெயரும் வழங்கலாயிற்று.

நாகார்ஜுன பிக்ஷு ஸ்தாபித்த மஹாயான பௌத்தம், புத்த பகவானுடைய சிலைகளை அமைப்பதற்கும் கோயில்கள் கட்டுவதற்கும் அநுமதி கொடுத்தது. "நாகார்ஜுன பிக்ஷுவைப் போற்றுகிறேன்" என்று நாகநந்தி அடிகள் இரண்டு முறை கூறியதின் பொருத்தம் இப்போது விளங்குகிறதல்லவா?

* * *

நாகநந்தி கூறியதைப் பொருட்படுத்தாமல் சிவகாமி, "அப்பா இவர்கள் எதற்காக ஒளிந்து கொண்டிருந்தார்கள்? ஏதாவது குற்றம் செய்து விட்டார்களா?" என்று கேட்டாள்.

"அம்மா! நமது நாகநந்தி அடிகள் இராஜ குலத்தினரைப் பார்ப்பதில்லை யென்று விரதம் வைத்துக் கொண்டிருக்கிறார். உனக்குத் தெரியாதா? இந்தப் பிள்ளை அவருடன் வந்திருந்தபடியால்......"

"அப்பா! சக்கரவர்த்தியும் குமாரரும் இவரைப் பார்த்திருந்தால்

திரும்பினார்கள். பிறகு பீமனே எங்கேயோ அலைந்து தனியாக வீட்டுக்கு வந்து சேர்ந்தான். குந்தியும் யுதிஷ்டிரனும் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார்கள். விஷங்கள் உடம்பில் கலந்து முன்னைவிட அதிக தேகபலம் கொண்டவனானான்.

குந்தி விதுரனைக் கூப்பிட்டு அவனிடம் ரகசியமாக,

“துரியோதனன் கொடியவன்; கெட்ட எண்ணம் கொண்டவன். ராஜ்யத்தில் ஆசைவைத்து, பீமனைக் கொல்லப் பார்க்கிறான். என் மனம் கலங்குகிறது” என்றாள்.

இதைக்கேட்ட விதுரன் “நீ சொன்னது உண்மை. ஆனால் இந்த விஷயத்தை வெளியே சொல்லாதே. துஷ்ட சுபாவமுள்ள துரியோதனனை நிந்தித்தால், அவனுக்கு இன்னும் அதிக துவேஷம் உண்டாகும். உன்னுடைய புத்திரர்கள் பூரண ஆயுள் படைத்திருக்கிறார்கள். பயப்பட வேண்டாம்” என்றான்.

யுதிஷ்டிரன் பீமனைப் பார்த்து “நீ பேசாமலிருக்க வேண்டும். நாம் எல்லாரும் இனி ஒருவரையொருவர் ஜாக்கிரதையுடன் காப்பாற்றிக் கொண்டு உயிருடன் இருக்கவேண்டும்” என்று எச்சரித்தான்.

பீமன் திரும்பி வந்து விட்டதைப் பார்த்த துரியோதனன் வியப்படைந்தான். பொறாமையும் துவேஷமும் அதிகரித்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டு தாபமடைந்து இளைத்துப் போனான்.

ஓஹோ!



“ஏன் ஆயா, உன் பேரன் சண்டைக்குப் போயிருக்கான்னு சொன்னியே. இந்தியாவிலேதான் இருக்கானா... எவ்வளவு பணம் அனுப்பறான்......?”

“ஐயோ, அவன் மாமன் கிட்டே கடன் கொடுத்த பணத்தைச் சண்டை போட்டு வாங்கியாற பக்கத்து வீதிக்கில்ல போயிருக்கான்னு சொன்னேன்?”

டிப் போட்டு கங்கையில் தள்ளி விட்டான். அந்த இடத்தில் துரியோதனன் சொல்படி ஜலத்தில் கூரிய சூலங்கள் நடப்பட்டிருந்தன. அவற்றின் மேல் விழுந்து உயிர் உடனே போய்விடுவதற்காக இந்த ஏற்பாடு. தற்செயலாக பீமன் விழுந்த இடத்தில் சூலங்கள் இருக்கவில்லை. ஜலத்திலிருந்த கொடிய விஷப் பாம்புகள் பீமனைக் கடித்தன. அவன் உணவில் சேர்க்கப் பட்டு அவன் உட்கொண்டிருந்த விஷம் இந்தப் பாம்புகளின் விஷத்துடன் கலந்து ஒன்றை ஒன்று அடித்து விட்டது. பீமசேனன் விஷத்தால் துன்பம் ஏதும் நேராமல் விழித்துக் கொண்டான்.



விஷப் பாம்புகள் நிறைந்தும் சூலங்கள் நட்டிருந்ததுமான நீர் மடுவில் தள்ளப்பட்ட பீமன் செத்தே போனான் என்று துரியோதனன் எண்ணினான். மற்றவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு ஊருக்குத் திரும்பினான். பீமசேனன் நமக்கு முன்னேயே நகரத்துக்குப் போய்விட்டான் என்று துரியோதனன் சொன்னதை யுதிஷ்டிரன் நம்பினான். வீட்டுக்குப் போனதும் தாயார் குந்தியைப் பார்த்து, "அம்மா! பீமன் எங்கே? அவன் எங்களுக்கு முன்னேயே வந்தானாமே? அவன் இங்கே வந்துவிட்டு வேறு எங்கேயாவது போனானா?" என்று மனக் கலக்கமடைந்து விசாரித்தான். உடனே பாண்டவர்கள் எல்லாரும் ஏதோ மோசம் நடந்திருப்பதாகச் சந்தேகப்பட்டு வனத்துக்குத் திரும்பிப் போய் எல்லா இடமும் தேடிப் பார்த்தார்கள். பீமன் சிக்கவில்லையென்று

வியாசர் விருந்து

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

பீமன்

பாண்டு ராஜன் வனத்தில் உயிர் நீத்ததை ரிஷிகள் ஹஸ்தினாபுரம் வந்து சொன்னதும் நாடு முழுதும் துக்கத்தில் ஆழ்ந்தது. விதுரனும் பீஷ்மனும் வியாசரும் திருதராஷ்டிரனும் மற்ற பந்துக்களும் முறைப்படி சிராத்தம் செய்தார்கள். நகரத்திலும் கிராமங்களிலும் ஜனங்கள் தங்களுடைய சொந்த பந்து இறந்ததைப் போல விசனப்பட்டார்கள். பாட்டியார் சத்தியவதிக்கு அவளுடைய புத்திரரான வியாசர் சொன்னார்: "நடந்து போன காலம் சுகமாகவே முடிந்தது. வருங்காலம் மிகவும் துக்ககரமாக இருக்கப் போகிறது. பூமிக்கு யௌவனம் தீர்ந்து விட்டது. வஞ்சகமும் பலவகைப் பாபங்களும் நிறைந்த காலம் வரப்போகிறது. இந்த குலத்துக்கு நேரப் போகிற கஷ்டமான காலத்தை நீ உன் கண்ணால் பார்க்க வேண்டாம். நகரத்தைவிட்டு விலகிப்போய்த் தபோவனத்தில் வாசஞ் செய்வதே மேலானது." இவ்வாறு வியாசர் சொன்னதைச் சத்தியவதி அங்கீகரித்து அம்பிகை அம்பாலிகை இருவரையும் கூட அழைத்துக்கொண்டு வனம் சென்று அங்கே தபஸ்விகளாகக் கொஞ்ச காலம் கழித்து விட்டு மேலுலகம் சென்றார்கள்.

ஹஸ்தினாபுரத்தில் பாண்டு புத்திரர்களும் திருதராஷ்டிரனுடைய நூறு குழந்தைகளும் உற்சாகமாக விளையாடிக் கொண்டு வளர்ந்தனர். அவர்கள் எல்லாரையும்விட பீமசேனன் தேக வன்மையில் மிஞ்சியிருந்தான். விளையாட்டுக்களிலெல்லாம் அவன் துரியோதனாதியரைப் பிடித்தான். தலை மயிரைப் பிடித்து இழுத்தும் அடித்தும் அவர்களை விளையாட்டில் தொந்தரவு செய்வான். பத்துக் குழந்தைகளை அவன் பிடித்துக் கொண்டு குளத்தில் முழுகுவான். அவர்கள் மூச்சு திக்கு முக்காடித் திணறும் வரையில் அவர்களுடன் தண்ணீருக்குள் மூழ்கி யிருந்து பிறகு மேலே வருவான். மரத்தின் மேலேறி அவர்கள் பழம் பறித்துக் கொண்டிருக்கையில் இவன் காலால் மரத்தை உதைப்பான். உதையின் வேகத்தினால் மேலிருந்த பையன்கள் பழங்களைப்போல் மரத்திலிருந்து கீழே விழுவார்கள். பீமசேனனுடைய விளையாட்டினால் எல்லாக் குழந்தைகளுக்கும் உடல் முழுதும் எப்போதும் காயமாக இருக்கும். இத்தகைய பால்ய சேஷ்டையினால் திருதராஷ்டிர புத்திரர்களுக்கு பீமன் பேரில் வரவர அதிக விரோதம் ஏற்பட்டு வந்தது. போதிய வயது வந்ததும் எல்லாரும் கிருபாசாரியரிடம் ஆயுதப் பயிற்சியும் வித்தியாப்பியாசமும் பெற்று வந்தார்கள். பீமசேனன் பேரில் துரியோதனன் கொண்ட பொறாமை அவனுடைய மதியைக் கெடுத்துச் செய்யக் கூடாத செயல்களில் அவனை ஏவிற்று. பீமனைக் கொன்றுவிட வேண்டும் என்றே நிச்சயித்தான். அவனைக் கொன்றால் பாண்டவர்களுடைய கொட்டம் முழுதும் அடங்கும் என்று எண்ணி அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தான். அவனைக் கங்கையில் தள்ளிவிட்டுப் பிறகு அருச்சுனனையும் யுதிஷ்டிரனையும் பிடித்துச் சிறையில் போட்டு பூமியை ஆள்வோம் என்று துரியோதனனும் அவன் தம்பிகளும் தீர்மானித்தார்கள்.

ஒரு நாள் துரியோதனன் ஜலக்கிரீடைக்கு வெகு விமரிசையாக ஏற்பாடு செய்தான். எல்லாரும் விளையாடி விட்டு போஜன பண்டங்கள் புசித்துக் களைப்புற்றுக் கூடாரங்களில் தூங்கினார்கள். பீமசேனன் எல்லாரைவிட அதிகமாக விளையாடினவனானபடியாலும் அவன் தின்ற பண்டங்களில் விஷம் கலந்திருந்த படியாலும் மயக்கம் மேலிட்டு ஜலக் கரையண்டை தரையில் படுத்துத் தூங்கிப் போனான். அந்த நிலையில் துரியோதனன் அவனைக் காட்டுக் கொடிகளினால் மெள்ளக் கட்-

தலை உலர்த்துவதற்காகப் பெண்கள் மாடியிலிருந்து அகில் புகையை ஊட்டிக்கொண்டிருப்பார்கள். அலங்கார தீபங்கள் அழகாய்க் கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருக்கும். இப்போது எப்படி இருக்கின்றன அவை?

நகை இழந்தன
    வாள்முகம், நாறுஅகில்ப்

புகைஇ ழந்தன
    மாளிகை, பொங்கு அழல்ச்

சிகைஇ ழந்தன
    தீவிகை, தேமலர்த்

தொகைஇ ழந்தன
    தோகையர் ஓதியே.

[நகை: உல்லாசம்; வாள் முகம்: பிரகாசமுள்ள முகம்; பொங்கு அழல்ச் சிகை: வளர்ந்து எரியும் சுடர்க் கொழுந்து; தீபிகை: விளக்கு; தேமலர்த்தொகை இழந்தன: அப்போது பறித்துக் கட்டிய புஷ்ப மாலைகளை அணியாதிருந்தன: எவை? தோகையர் ஓதியே: பெண்களது கூந்தல்கள்.]

இப்படி அழகிழந்த நாடு நகரத்தைப் பார்த்தான் பரதன். ஒன்றுமே விளங்கவில்லை அவனுக்கு.

என்ற நாட்டினை
    நோக்கி இடருழந்(து),

ஒன்றும் உற்றது
    உணர்ந்திலன்; உன்னுவான்;

'சென்று கேட்பதோர்
    தீங்குள தாம்' என

நின்று நின்று
    நெடிதுயிர்த் தானரோ!

[ஒன்றும் உற்றது உணர்ந்திலன் உன்னுவான்: நேர்ந்தது ஒன்றையும் அறிய முடியவில்லை. அதனால் யோசனையில் ஆழ்ந்து போகிறான்; சென்று கேட்பதோர் தீங்குள தாம் என: வீடுபோய்ச் சேருவோமானால் ஏதோ துக்க சமாசாரத்தைக் கேட்கவேண்டும்போலிருக்கிறதே என்று எண்ணியவனாய்; நின்று நின்று நெடிது உயிர்த்தான்: கால் எடுத்து வைக்க இயலாமல் நின்று நின்று பெருமூச்செறிந்தான்.]

வர்ணனைப் பாடல்களில், உல்லாசப் பாடல்கள் ஒரு பக்கம்; மற்றொரு பக்கம் சோகப் பாடல்கள். பாடல்களின் உருவத்தில் அந்த அந்த பாவங்களைப் பார்க்கவேண்டும்; தமிழ் பாஷை பாவங்களைக் கொடுப்பதற்கு எப்படி உதவுகிறது என்றும் பார்த்து அனுபவிக்க வேண்டும்.

ஆகாச வெடி

"தங்கசாலைத் தெருவில் ஒரு திருடன் ஒரு ஸிந்தியின் பூணூலிலிருந்த சாவியைப் பூணூலோடு கத்தரித்து எடுத்து இரும்புப் பெட்டியைத் திறந்து முப்பதாயிரம் ரூபாய் தங்கத்தைக் கொண்டு போய் விட்டான்."

—சென்னைச் செய்தி.

பாவம்! அந்த ஸிந்தி அப்புறம் வேறு புதுப் பூணூல் போட்டுக் கொண்டார் போலும்!

★

"ஸ்விஸ் நகரத்தை நேச விமானங்கள் தெரியாத்தனமாகத் தாக்கியதால் ஏற்பட்ட பொருள் நஷ்டம் உயிர் நஷ்டத்தைக் குறித்து வருந்தி விட்டு நஷ்ட ஈடு தரப்படுமென்று ஸ்ரீ கார்டல் ஹல் தெரிவித்தார்." —தினசரி.

இதையும் தெரியாத்தனமாகச் சொல்லியிருக்க மாட்டார் என்று நம்புகிறோம்.

★

"இங்கிலீஷ்காரர்கள் ரொம்ப நல்லவர்கள், அவர்கள் சண்டை போட மாட்டார்கள் என்று ஹிட்லர் எண்ணினார். சேம்பர்லேன் பிடித்திருந்த குடைக்குக்கூட இரும்புப் பிடி இருந்தது என்பதை ஹிட்லர் உணரவில்லை."

—அட்லைஸர் ஹூட்.

ஹிட்லர் உணராவிட்டாலும் இந்தியாவைப் பிடித்திருக்கும் இரும்புப் பிடியின் மகிமையை இந்தியர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

★

"இம்பால் இன்னும் நம்பிக்கையிலேயே இருக்கிறதென்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன் என்று ஆகின்லெக் கூறுகிறார்." —ஒரு தமிழ்த் தினசரி.

அப்படியா? இதுவரையில் அது அஸ்ஸாமில் இருப்பதாக அல்லவா எண்ணிக்கொண்டிருந்தோம்?

★

"திமாப்பூர் ரயில்வே ஸ்டேஷனை நோக்கி ஜப்பானியத் துருப்புகள் போய்க் கொண்டிருக்கலாம் என்று ஊகிப்பதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன." —ஒரு செய்தி.

ரயில்வேக் கட்டணத்தை உயர்த்தி விட்டார்களா, இல்லையா என்று தெரிந்து கொள்வதற்காகவோ, என்னமோ!

ஐந்து ரூபாய் பரிசு: *சென்ற இதழில் வெளியான "வேற்றுமை" என்னும் காலக்ஷேபத்துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ஜி. வி. ராகவாச்சாரி, பழைய மாம்பலம், சென்னை.*



அரைக்கீரை விதைத் தைலம்

அரைக்கீரை விதையுடன் 72-வித சரக்குகளும் அநேக பச்சிலைகளும் சேர்த்து தயாரிக்கப்பட்டது. இத் தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதிகளைப் போக்குவதுடன் கண் எரிச்சல், கண் மறைப்பு முதலிய கண் சம்பந்தமான வியாதிகளையும், காது குத்தல், காதில் சீழ் வருதல் முதலிய வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது.

●

கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய வெண்மையாக்குவதில் நிகரற்றது.

பெரிய பார்களாகவும் சிறு கட்டிகளாகவும் குறைந்த விலையில் கிடைக்கும்.

●

தயாரிப்பவர்கள் :

டி.எஸ்.ஆர். அண்டு கோ., கும்பகோணம்

மதராஸ் ஸோல் ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைக்ராப்ட்ஸ் ரோடு — திருவல்லிக்கேணி

●

பாலக்காட்டுக்கு ஸோல் ஏஜெண்டுகளும்
கோயமுத்தூருக்கு ஸ்டாக்கிஸ்டுகளும்

தி சதர்ன் இந்தியா ஏஜன்ஸீஸ்

அவநாசி ரோடு — கோயமுத்தூர்

புலங்களையுடைய ; கோசலை நண்ணினன் : கோசலை நாட்டை அடைந்தான்.]

அடடா, கோசலை நாட்டின் வளந்தான் என்ன? எங்குமில்லாத அவ் வளம் பிரிந்து போயிருந்த பரதனுக்குத் திரும்பி வந்ததும் எவ்வளவு ஆனந்தத்தைக் கொடுத்திருக்கும்! அப்படி ஆனந்திப்பது மனுஷ இயல்புதானே? ஆனால் அதற்குமாருக என்றும் இல்லாத காட்சிகள் அவனுக்குத் தென்படுகின்றன.

ஏர்து றந்த
வயல் ; இளைமைந்தர்தோள்
தார்து றந்தன ;
நண்தலை நெல்லினும்
நீர்து றந்தன ;—
தாமரை நீத்தெனப்
பார்து றந்தனள்
பங்கயச் செல்வியே.


[ஏர் துறந்த வயல்: உழவு நடக்க வேண்டிய பருவம், ஆனால் ஏராவது உழவாவது ஒன்றுமில்லை ; இளைமைந்தர் தோள் தார் துறந்தன : உழவை ஒரு விழாவாகவே ஆரம்பிப்பார்கள் உழுகிற வாலிபர்கள். மாலையை அணிந்துகொண்டு உழுவார்கள்,— இப்பொழுதோ மாலை யொன்றுமில்லை ; வெறுமனே நிற்கிருர்கள் ; தண் தலை நெல்லினும் நீர் துறந்தன: நந்த வனத்துக்கும் வயலுக்கும் வாய்க்காலிலுள்ள நீரைப் பாய்ச்சாமல் அவை சாய்ந்து கிடக்கின்றன ; தாமரை நீத்தெனப் பார் துறந்தனள் பங்கயச் செல்வியே : தாமரைப் பூவானது தடாகத்தில் மலர்ந்திருக்கும் போது லக்ஷ்மி அதில் வீற்றிருக்கிருள் என்று சொல்லுவோம். அதே தாமரைப் பூவைக் களைந்து வெளியே போட்டுவிட்டால் வாடி வதங்கிப் போய்விடும். அப்போது பூவிலிருந்து லக்ஷ்மி அகன்று விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும். இதே போல நாட்டை விட்டு லக்ஷ்மி அகன்று விட்டாள் என்கிருர் கவிஞர். பங்கயச் செல்வி : லக்ஷ்மி தேவியாகிய அழகுத் தெய்வம்.]

சாயங்கால நேரம் என்ருல் அயோத்தியில் தனியான உல்லாசமும் அழகும் தவழும். பாடல்கள் என்ன! நாதஸ்வரம் என்ன ! நாட்டியம் என்ன ! கோபுரத்து ஸ்தூபிகளில் குழையும் பூவுமாகத் தொகுத்த கனத்த மாலைகள் சுற்றி அலங்கரிக்கும். கலசக் கட்டுகளுடைய மாடிகளிலிருந்து பெண்கள் பாடும் அருமையான வள்ளைப் பாடல்களும் இசையும் வந்து காதில் பாயும். இப்போதோ அவை யொன்றுமில்லை.

பாடல் நீத்தென,
பண்தொடர் பண்குழல்
ஆடல் நீத்த
அரங்கம், அகன்புனம்
கூடல் நீத்தன
கூடிகை, சூளிகை
மாடம் நீத்தன
மங்கல வள்ளையே.

[அரங்கம்: நடன மண்டபம் ; அகன் புனம் : குழையாலும் பூவாலும் கட்டிய தோரண மாலைகள் ; கூடிகை : கோபுரங்கள் ; சூளிகை மாடம் : கலசங்கள் வைத்துக் கட்டிய கைப்பிடிச் சுவருள்ள உப்பரிகை ; மங்கல வள்ளையே : ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய இசைப் பாடல்கள்.]

மக்களது முகத்தில் உல்லாசம் தாண்டவமாடிக் கொண்டிருக்கும். கூந்



கம்பர் தரும் காட்சி

"டி.கே.சி."

60. எங்கே லக்ஷ்மி தேவி?

பரதன் கேகய நாட்டில் இருந்தான். தந்தையிடமிருந்து தூதுவர் வந்தார்கள். தந்தையைப் பார்த்துவிடவேண்டும், அண்ணன் ராமனைப் பார்த்துவிடவேண்டும் என்ற ஆத்திரத்தில் புறப்படுகிறான். நாள் நக்ஷத்திரம்கூடப் பார்க்காமல் உல்லாசமாகப் புறப்படுகிறான். அவனுடைய பரிவாரங்களும் புறப்படுகின்றன.

யானை சுற்றின;
 தேர் இரைத்(து) ஈண்டின;
மான வேந்தர்
 குழுவினர்; வாளுடைத்
தானை சூழ்ந்தன;
 சங்கு முரன்றன;
மீன வேலையின்
 விம்மின பேரியே!

[யானை சுற்றின: அப்படியும் இப்படியுமாக வந்து யானைகள் படையோடு சேர்கின்றன; தேர் இரைத்து ஈண்டின: தேர்களும் நின்ற இடங்களிலிருந்து மிக்க சப்தத்தோடு நகர்ந்து வந்து சேர்ந்துவிடுகின்றன; மான வேந்தர் குழுவினர்: உயர்ந்த பதவிகளிலுள்ள அரசர்களும் வந்து சேர்ந்துகொண்டார்கள்; வாள் உடைத் தானை சூழ்ந்தன; வாள் ஏந்திய காலாட்படைகளும் சூழ்ந்துகொண்டன; சங்கு முரன்றன: சங்குகள் ஒலித்தன; எல்லாவற்றையும் விட, சமுத்திரத்தையே ஒத்துச் சப்தித்தன பெரிய முரசங்கள்.]

பரதன் புறப்படுகிற செய்தியைக் குறித்தன இத்தனை முழக்கங்களும். சிறிது நேரத்தில் அவை ஒலிப்பு அடங்கி நிற்கின்றன. பிறகு பாடகர்கள் தங்கள் பாடலை ஆரம்பிக்கின்றார்கள். அந்த இசைக்குள் அடங்கி ஒலிக்கிற தாள ஓசையையும் கேட்கிறோம்.

ஊன்அ ளைந்த
 உடற்குயி ராம் எனத்
தான்அ ளைந்து
 தழுவின தண்ணுமை;
தேன்அ ளைந்து
 செவியுற வார்த்தென,
வான்அ ளைந்தன
 மாகதர் பாடலே.

[ஊன் அளைந்த உடற்கு உயிராம் என; ஊனோடு சேர்ந்த உடலுக்கு உயிரும் துடிப்பும் அவசியந்தான். ஆனால் அவைகள் உள்ளிருந்து உடலுக்கு உணர்ச்சி பாவத்தையும் அழகையும் தரவேண்டும். இதயம், கை நாடி இவைகள் வெளியே வந்து தங்கள் துடிப்பைக் காட்டுகிறதென்று வந்தால் ஆரோக்கியம் என்று சொல்லமுடியுமா? அதுமாதிரியே தாளம் பாடலுக்கும் பண்ணுக்கும் உள்ளாக அடங்கி இருந்து நயம் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டும். எந்தவிதத்திலும் மத்தளத்துக்காக ஏற்பட்டது பாட்டு என்று ஆகிவிடக்கூடாது; தண்ணுமை: மத்தளம்; வான் அளைந்தன மாகதர் பாடலே: சமஸ்தான வித்வான்களது இன்னிசைப் பாடல்களின் ஓசை வானத்தையே எட்டியதுபோலிருந்தது!]

ஒரே உற்சாகத்துடன் பிரயாணம் நடைபெறுகிறது.

ஆறும் கானும்
 அகன்மலை யும்கடந்(து)
ஏறி ஏழ்பகல்
 நீங்கிப்பின், எந்திரத்(து)
ஊறு பாகு
 மடையுடைத்(து) ஒண்முளை
நாறு பாய்வயல்க்
 கோசலை நண்ணினான்.

[அகன் மலையும் கடந்து ஏறி: அகன்ற மலைப் பிரதேசங்களைக் கடந்து வெகு தூரமே சென்று; ஏழ் பகல் நீங்கிப் பின்: ஏழு நாள் பிரயாணத்தில் கழிந்த பின்; எந்திரத்து ஊறு பாகு மடை உடைத்து: கரும்பாலையிலிருந்து வடிந்த சாறானது அதற்குரிய வாய்க்காலின் மடையை உடைத்துக் கொண்டு; ஒண் முளை நாறு பாய் வயல்: பச்சைப் பசேல் என்று முளைத்து வரும் நாற்றங்காலில் பாயும்படியான, ;நன்செய்ப்

பாராத காரணங்களினால் நேரிட்டு விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். ஜப்பான் படைகள் அஸ்ஸாம் மாகாணத்துக்குள்ளே மேலும் முன்னேறி வருவதாக வைத்துக் கொள்வோம். அப்போது, இந்திய மக்களிடம் நாம் காணும் மனோபாவத்தினால் தீங்கு விளையாதா? யுத்தத்தில் வெற்றிக்கு அதனால் தடை ஏற்படாதா? நிச்சயமாக ஏற்படும். அதனால், ஆயிரம் உயிர்களின் சேதத்துடன் அடையக் கூடிய வெற்றியைப் பதினாயிரம் உயிர்களைப் பலி கொடுத்து நாம் அடைய வேண்டியதா யிருக்கும்.

எனவே, ஜப்பான் யுத்தம் சம்பந்தமாக உடனே இந்தியாவில் செய்ய வேண்டிய முக்கியமான ஏற்பாடு, இந்திய மக்களின் அலட்சிய மனோபாவத்தை மாற்றுவதேயாகும். மாற்றி, அவர்களை யுத்த வெறி கொள்ளும்படி செய்ய வேண்டும். பாரத புண்ணிய பூமியிலிருந்து ஜப்பானியரை விரட்டுவதற்காக நாற்பது கோடி இந்தியர்களும் உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்யத் தயாராயிருக்கும் நிலைமையை ஏற்படுத்தவேண்டும்.

இதை ஏற்படுத்தக்கூடிய சக்தியும் பொறுப்பும் பிரிட்டிஷ் சர்க்காரின் கையிலேதான் இருக்கின்றன.

அவர்கள் பிரமாதமாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை.

இந்தியாவின் ஆட்சியை இந்தியர்களின் கையிலே கொடுத்து, "இது உங்களுடைய தேசம்; உங்களுடைய யுத்தம்; நீங்களே நடத்துங்கள்!" என்று சொல்ல வேண்டியதுதான்.

அடுத்தாற்போல் ருஷியாவின் காரியத்தைப் பாருங்கள்.

சென்ற வாரத்தில் ருஷியாவின் சைனியங்கள் ருமேனியாவுக்குள் பிரவேசித்தன. பிரவேசிப்பதற்கு முன், ருஷிய அயல் நாட்டு மந்திரி மொலடாவ், "ருமேனியாவில் ஓர் அடிப் பிரதேசம் கூட எங்களுக்கு வேண்டியதில்லை; ருமேனியாவின் சமூக வாழ்க்கையில் தலையிடும் உத்தேசமும் எங்களுக்கில்லை!" என்று பகிரங்கமாக அறிவித்தார்.

நாஜி ராட்சதர்களுடன் சேர்ந்து அகாரணமாக ருஷியாவில் படையெடுத்த பாதகத்தை ருமேனியா செய்தது. அப்பேர்ப்பட்ட ருமேனியாவுக்குச் சுதந்திரமும் சுய நிர்ணயமும் உண்டு என்று ருஷிய சர்க்கார் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்!

ருஷியா சம்பந்தமாகப் போல்ஷிவிக் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருந்த ஹிட்லர் தலை குனியும்படியாயிற்று.

அதே மாதிரி டோஜோவும் வெட்கித் தலைகுனியும்படி செய்ய இதோ காலம் வந்து விட்டது.

இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதை, "யுத்தத்துக்குப் பிறகு" என்று தள்ளிப் போடுவதில் பயனில்லை. இப்போதே செய்வதிலேதான் யுத்தத்தை நடத்த அநுகூலம் இருக்கிறது. அதுதான், இந்திய மக்களின் அலட்சிய மனோபாவத்தை மாற்றி அவர்களைப் போர் வெறி கொள்ளும்படி தூண்டக் கூடியது.

மகா வீரர்கள் என்றும், உயிரைத் திரணமாய் மதிப்பவர்களென்றும், பெயர் பெற்ற ஜப்பானியர் சைனாவில் பத்து வருஷமாக நடத்தும் போரில் ஏன் வெற்றிபெறவில்லை? ஜாவா, மலாய், பர்மா முதலிய இடங்களில் ஏன் சுலபமாய் வெற்றி பெற்றார்கள்?

சீனர்கள் தங்களுடைய சொந்த நாட்டின் சுதந்திரத்துக்காகப் போரிடுகிறோம் என்ற உணர்ச்சியுடன் யுத்தம் செய்து வருவதினாலேதான்.

பக்கத்திலுள்ள சீனாவை ஜயிக்க முடியாத ஜப்பானியர்கள் பல்லாயிரம் மைலுக் கப்பாலுள்ள இந்தியாவுக்குள்ளே துணிந்து நுழைவதற்குக் காரணம் என்ன?

"இந்தியாவுக்குச் சுதந்திரமில்லை; இந்திய மக்கள் உற்சாகமாகப் போராட மாட்டார்கள்!" என்ற அசட்டு ஆசைதான் காரணமாக இருக்க வேண்டும்.

அந்த ஆசையில் மண்ணைப்போடும்படி பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்தியாவை இந்தியர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள் என்று கேட்ட க்ஷணமே ஜப்பானியருக்குச் சீனத்தில் தாங்கள் படும் பாடு ஞாபகத்துக்கு வரும். உடனே, அவர்கள் அஸ்ஸாமிலிருந்து கம்பி நீட்டி விடுவார்கள்.

அப்படி ஒரு வேளை போகா விட்டாலும், முறத்தினால் புலியை விரட்டியடித்த பழந் தமிழ் நாட்டு வீரப் பெண்ணைப்போல், நாற்பது கோடிச் சுதந்திர மக்கள் கொண்ட இந்தியா ஜப்பான் புலியைச் சுலபமாக அடித்து விரட்டுதல் சாத்தியமாகும்.

புலி வந்துவிட்டது!

“ஜப்பான் புலி வருகிறது! ஜாக்கிரதை! ஜாக்கிரதை!” என்று இதற்கு முன்னால் எத்தனையோ தடவை நமக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. நாமும் பதிலுக்குப் பதில் எச்சரிக்கை செய்து வந்திருக்கிறோம்.

“ஜப்பான் புலி இந்தியாவை விழுங்க வருகிறது! ஆகையால் நாங்கள் சொன்னபடி கேளுங்கள். சுதந்திரம், சுயராஜ்யம் என்று இச்சமயம் பேசாதீர்கள்!” என்று பிரிட்டிஷ் சர்க்கார் நமக்கு எச்சரிக்கை செய்து வந்தார்கள்.

“ஜப்பான் புலி இந்தியாவை நெருங்கி வருகிறது! மலாயிலும், ஜாவாவிலும், பர்மாவிலும் நடந்தது போல் இந்தியாவிலும் நடக்க வேண்டாம்! ஆகையால், இந்தியத் தலைவர்களிடம் உடனே இராஜ்யத்தை ஒப்புவியுங்கள்!” என்று நாம் பிரிட்டிஷ் சர்க்காருக்கு எச்சரிக்கை செய்து வந்திருக்கிறோம்.

இவ்விதம் இத்தனை காலமாக நாம் பரஸ்பரம் பூச்சாண்டி காட்டுவதற்கே உபயோகமா யிருந்த ஜப்பான் புலியானது கடைசியில் உண்மையிலேயே வந்து விட்டதாகக் காண்கிறது! அஸ்ஸாமில் மணிப்பூர் சமஸ்தானத்தில் அது பிரவேசித்திருக்கிறது! உள்ளே பிரவேசித்தது மல்லாமல், நடு ரோட்டில் உட்கார்ந்து கொண்டு அது உறுமிக் கொண்டிருக்கிறது! பொல்லாத முரட்டுப் புலி என்பதில் சந்தேகமில்லை.

ஜப்பானியர் பர்மாவை வசப்படுத்திக் கொண்ட காலத்திலிருந்து இந்தியாவின் அஸ்ஸாம் எல்லை பெரிதும் முக்கியத்தை அடைந்தது. அங்கே யுத்த முஸ்தீப்புகள் பலமாக நடந்துகொண்டிருக்கின்றன என்று எல்லாரும் நம்பியிருந்தோம். துருப்புகள் வடக்கு நோக்கிப் போகும்போதெல்லாம் அஸ்ஸாமுக்குத்தான் போகின்றன என்று எண்ணினோம். பர்மாவின்மீது படையெடுத்து ஜப்பானியரை அங்கிருந்து விரட்டி யடிப்பதற்கு அஸ்ஸாம் மாகாணந்தான் பிரதம தளமாக இருக்குமென்று எதிர்பார்த்தோம். அஸ்ஸாமிலிருந்து பர்மா மீது படையெடுக்க வேண்டியதை உத்தேசித்து, அங்குள்ள ஒரு ரயில் பாதையையே அமெரிக்கர்களிடம் ஒப்படைத்திருப்பதாகக் கேள்விப்பட்டோம்.

இவ்விதமாக வருஷக் கணக்கில் யுத்த முஸ்தீப்புகள் நடந்து வந்திருக்கும் அஸ்ஸாம் எல்லைக்குள்ளே தான் ஜப்பானியர் இப்போது பிரவேசித்திருக்கிறார்கள். அஸ்ஸாமின் கிழக்கு எல்லைப் புறத்திலுள்ள மணிப்பூர் சமஸ்தானத்துக்குள்ளே அவர்கள் நுழைந்திருக்கிறார்கள். இதுகாறும், மணிப்பூர் சமஸ்தானமானது நடனக் கலையினாலே அகில இந்தியப் பிரசித்தி பெற்றிருந்தது. “மணிப்பூர் நடனம்” ஸ்ரீ உதய சங்கர் போன்றவர்களால் இந்தியா முழுவதும் பரவியிருந்ததோடு அகில உலகப் பிரசித்தியும் அடைந்திருந்தது. அந்த மணிப்பூரானது இப்போது ஜப்பான் யுத்தத்தில் பிரசித்தி பெற்று விளங்குகிறது. அதன் பெயர் அமெரிக்கா வரையில் சென்று அடிபடுகிறது.

அஸ்ஸாமில் யுத்த முஸ்தீப்புகள் செய்தவர்கள் மணிப்பூரையும் அலட்சியம் செய்துவிட வில்லையென்பதற்கு ஓர் உதாரணம் சமீபத்தில் கிடைத்தது. மணிப்பூர் சுதேச சமஸ்தானமாகையால் அதற்கு ஒரு ராஜா இருக்கிறார். மேற்படி மணிப்பூர் ராஜா சில காலத்துக்கு முன்பு தமது இராஜ்யத்தைப் பார்வையிடக் கிளம்பிப்போனபோது, வழியில் இராணுவ உத்தியோகஸ்தர்களால் மறிக்கப்பட்டார்! “நீர் யார்? எங்கே உமது பெயர் எழுதிய சீட்டு?” என்று கேட்கப்பட்டார்! அதற்குப் பிறகு, மேற்படி மணிப்பூர் ராஜா எங்கே போனாலும், தமது பெயர் அச்சடித்த இராணுவ அனுமதிச் சீட்டைக் கூட எடுத்துக்கொண்டு போகிறாராம்!

இப்படியெல்லாம் கண்ணுங் கருத்துமாக பிரிட்டிஷ் படைகளும், அமெரிக்கப் படைகளும், இந்தியப் படைகளும் சேர்ந்து பலமான யுத்த முஸ்தீப்புகள் செய்து சர்வ ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வந்த மணிப்பூர் சமஸ்தானத்துக் குள்ளே தான் ஜப்பானியர்கள் துணிந்து பிரவேசித்திருக்கிறார்கள். பிரவேசித்து மணிப்பூரின் தலை நகரமான இம்பாலை நோக்கிப் பல வழிகளிலும் வரப்பார்க்கிறார்கள். இம்பாலுக்குத் தெற்கே யுள்ள டிட்டிம் நகருக்குப் போகும் சாலையையும், இம்பாலுக்கு வடக்கே யுள்ள கோஹிமாவுக்குப் போகும் சாலையையும் அடைந்து, அந்தச் சாலைகளை வெட்டப் பார்க்கிறார்கள். இன்னும், நமது சைனியத்துக்குச்

சாமான்கள் வந்து சேர்வதற்கு அவசியமான ரயில் பாதையைப் பிடித்துக் கொள்ளவும் பார்க்கிறார்கள். நமது துருப்புகளைப் பல இடங்களிலும் நெருக்கி வருகிறார்கள்.

அஸ்ஸாமில் இப்போது ஜப்பானியர் அடைந்திருக்கும் முன்னேற்றம் ஒரு பெரிய மகா யுத்தத்தில் பிரமாதமான காரியம் அல்ல. ஆயிரக்கணக்கான மைல் விஸ்தீரணமுள்ள இந்தியா தேசத்தில் ஜப்பானியர் ஒரு சில மைல் பிரதேசத்தைப் பிடித்துக் கொண்டதினால் மோசம் ஒன்றும் வந்துவிடாது. ஜப்பானியர் காட்டிலும் மலையிலும் ஒளிந்து மறைந்து வந்து இந்தச் சொற்ப முன்னேற்றத்தை அடைந்திருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. எனவே, ''கவலை வேண்டாம்; ஜப்பானியரைத் திருப்பி அடித்துத் துரத்தி விடுவோம்!'' என்று தளபதி ஆகின்லக் கூறுவதை நாம் முழுதும் நம்புகிறோம். ''ஆகாசப் படை பலம் நமக்குத்தான் அதிகம்'' என்றும், ''அஸ்ஸாமிலுள்ள நமது படைகளுக்குக் காட்டுச் சண்டையில் நல்ல பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது'' என்றும் சர்க்கார் உறுதி கூறுவதையும் நாம் நம்புகிறோம். யுத்தத்தின் முடிவு இந்த அஸ்ஸாம் படையெடுப்பினால் பாதிக்கப்படப் போவது கிடையாது. அதைப் பற்றி நாம் கவலைப்படவில்லை; கவலைப்பட வேண்டிய அவசியமுமில்லை.

ஆனால், நாம் கவலைப்படுவது எதற்காக வென்றால், இந்தியப் பொதுஜனங்களின் அதிசயமான அலட்சிய மனோபாவத்தைப் பற்றித்தான். நமது புண்ணிய பாரத பூமியில் அன்னியர்கள் பிரவேசித்தார்கள் என்று அறிந்ததும், மக்களின் இருதயம் துடிக்க வேண்டாமா? இரத்தம் கொதிக்க வேண்டாமா? இமய மலையிலிருந்து கன்னியா குமரி வரையில் ஜனங்கள் வீறுகொண்டு எழுந்திருக்க வேண்டாமா? ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்? ஏது செய்ய வேண்டும்?'' என்று கதற வேண்டாமா? ''பாரத நாட்டில் அன்னியன் புகுந்தான்; பாரத மக்களே! போருக்கு எழுங்கள்!'' என்று நாலா பக்கமும் முழங்க வேண்டாமா? ஜனங்கள் தங்கள் உடல் பொருள் ஆவி யெல்லாம் அர்ப்பணம் செய்து தாய் நாட்டின் மானத்தைக் காக்க முன் வரவேண்டாமா?

இதற்கெல்லாம் பதிலாக நாம் காண்பது என்ன? தேசத்தில் எங்கேயும் பரபரப்பையோ உற்சாகத்தையோ காணவில்லை. ஏனோ தானோவென்ற அலட்சிய சுபாவத்தையே காண்கிறோம். எங்கேயோ, யாருக்கும் யாருக்குமோ, எதற்காகவோ யுத்தம் நடக்கிறது என்னும் மனோபாவத்தையே பார்க்கிறோம். தேசத்தில் எல்லாக் காரியங்களும் எப்போதும்போல் சர்வ நிதானமாக நடந்து வருகின்றன. இந்திய சட்ட சபையில் ''ஹிந்து விவாகச் சீர்திருத்த மசோதா''வைப் பற்றி விஸ்தாரமாக விவாதம் நடைபெறுகிறது. அஸ்ஸாம் யுத்தத்தைக் காட்டிலும் ஸூரத் முனிசிபாலிடி தேர்தல் ஜனங்களின் கவனத்தை அதிகமாகக் கவர்கிறது!


இந்த அலட்சிய சுபாவம் தேச நலத்துக்கு உகந்ததா? அல்லது யுத்தத்தில் வெற்றிக்குத்தான் அனுகுணமானதா? தற்சமயத்துக்கு இதனால் பெரிய கெடுதல் ஒன்றும் நேர்ந்து விடப் போவதில்லை. ஆனால், நெடுகிலும் இப்படியே விட்டு வைக்கலாமா?

யுத்தத்தில் நாளைக்கு என்ன நடக்குமென்று நிச்சயமாய்ச் சொல்வது யாராலும் முடியாத காரியம். மூன்று வருஷத்துக்கு முன்னால் ஹிட்லரும் முஸோலினியும் வெற்றியின் சிகரத்தை எட்டிப் பிடித்து விடுவார்கள் போலிருந்தது. அதன் பிறகு, முஸோலினி அதல பாதாளத்துக்குப் போய்விட்டார்! ஹிட்லர் திண்டாடித் திணறிக் கொண்டிருக்கிறார். ருஷியர்கள் ஜெர்மன் படைகளை நூற்றுக் கணக்கான மைல் துரத்தி யடித்துக் கொண்டு வந்து, கிட்டத்தட்ட ஜெர்மனியின் எல்லைக்கே வந்துவிட்டார்கள்.

வட ஆப்பிரிக்காவிலிருந்து ரோமலைத் துரத்தி யடித்த பிரிட்டிஷ் சைனியங்கள் ஸிஸிலியைக் கைப்பற்றி இதாலிக்குள் இறங்கிய வேகத்தைப் பார்த்தால், வெகு சீக்கிரத்தில் இதாலி அவர்கள் வசத்தில் வந்து விடும் என்று தோன்றியது. ஆனால், காஸினோ என்னு மிடத்தில் அவர்களுடைய முன்னேற்றத்துக்கு முற்றுப் புள்ளி விழுந்து விட்டது! மாதக் கணக்கில் காஸினோ போர் நடந்து வருகிறது; அதை இன்னும் பிடித்தபாடில்லை. ''இந்த சரித்திரம் பிடித்த காஸினோவுக்காக மனித உயிர்களை அதிகமாக விரயம் செய்வது வீண்!'' என்று இப்போது சொல்லப்பட்டு வருகிறது.

இதேவிதமாக மணிப்பூரைப் பற்றியும் பேசும்படியான நிலைமை எதிர்

-நமது சித்திர நிபுணர் தூரதிருஷ்டியில் பார்த்தவை.



இந்திய சட்டசபைக் காட்சிகள்



வதுபோல் மேற்படி இந்திய சட்ட சபைக் கேலிக்கூத்திலும் ஓர் உபயோகம் இல்லாமற் போகவில்லை. "இந்திய அரசாங்கமானது இந்தியப் பொது மக்களின் சம்மதத்துடன் நடக்கவில்லை" என்பதை உலகத்துக்கு ஞாபகப்படுத்த அது உபயோகமாகிறது.

முந்திரிக் கொட்டைகள்

இந்திய சட்டசபைக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும், ஒரு காலத்தில் நல்ல மதிப்பு இருந்து வந்தது. பண்டித மோதிலால் நேரு, ஸ்ரீ வி. ஜே. படேல், ஸ்ரீ எஸ். சீனிவாசய்யங்கார் முதலிய தீரர்கள் தங்களுடைய கம்பீரமான பேச்சுக்களினாலும் நடவடிக்கைகளினாலும் மேற்படி மதிப்பை உண்டுபண்ணினார்கள். பின்னர், ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சி நடந்தபோதும் இந்தியச் சட்டசபையிலுள்ள காங்கிரஸ் அங்கத்தினருக்கு நல்ல மதிப்பு இருந்தது. அப்போதெல்லாம் காங்கிரஸ் அங்கத்தினர்களின் பேச்சுக்குச் சர்க்கார் அங்கத்தினர் மரியாதையுடன் பதில் சொல்லி வந்தார்கள். அந்த மதிப்புக்குக்கூடப் பங்கம் நேரும் முறையில் சில காங்கிரஸ் அங்கத்தினர் இவ்வருஷம் நடந்து கொண்டது மிகவும் வருந்தத்தக்கதாகும். இந்த முந்திரிக் கொட்டைகள் காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு மாறாக இந்திய சட்ட சபையில் ஆஜராகி என்னவெல்லாமோ பேசித் தீர்த்தார்கள். இதனால், டாக்டர் கரேயைப்போல் காங்கிரஸிலிருந்து நிர்வாக சபையில் குதித்தவர்கள், "நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்? காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறி உங்கள் மனச் சாட்சி சொன்னதினால்தானே இங்கே வந்தீர்கள்? அது போலத்தான் நானும் என் மனச் சாட்சிப்படி உத்தியோகம் ஏற்றுக் கொண்டேன்" என்று சொல்வதற்கும், மற்ற நிர்வாக சபை அங்கத்தினர் ஏசிக் காட்டுவதற்கும் இடமாயிற்று! ஸ்ரீ புலாபாயின் தலைமையில் எல்லாக் காங்கிரஸ் அங்கத்தினரும் வரவு செலவுத் திட்டத்தை நிராகரிப்பதற்காக மட்டும் போய்விட்டுக் கட்டுப்பாடாகத் திரும்பி வந்திருந்தால் எவ்வளவு கௌரவமாயிருந்திருக்கும்?

ஒரு படிப்பினை

இந்திய சட்டசபைக் காங்கிரஸ் அங்கத்தினர் பலர் இன்னும் பாதுகாப்பில் இருந்து வருகிறார்கள். அப்படியிருந்தும், வரவு செலவுத் திட்டத்தை இவ் வருஷம் நிராகரிக்க முடிந்ததற்குக் காரணம் காங்கிரஸ் - முஸ்லிம் லீக் கூட்டுறவாகும். ஸ்ரீ புலாபாயின் பேச்சுக்குப் பதில் சொல்லும்போது, பொக்கிஷ அங்கத்தினர் கனம் ரெயிஸ்மான் மேற்படி கூட்டுறவைச் சுட்டிக் காட்டினார். "இதே மாதிரி இந்தியாவின் அரசியல் திட்டத்தின் விஷயத்திலும் ஒரு முடிவுக்கு வந்துவிடுங்கள். உடனே நாங்கள் ஆட்சியை உங்களிடம் ஒப்புவித்து விட்டு விலகிக் கொள்ளச் சித்தமாயிருக்கிறோம். தற்போது முள்ளின்மேல் நிற்பது போல்தான் இங்கே இருந்து கொண்டிருக்கிறோம்!" என்றார் ரெயிஸ்மான். "இது வெறும் பேச்சு; காங்கிரஸ் - லீக் ஒற்றுமை ஏற்பட்டதும் இராஜ்யத்தை ஒப்புவித்து விடுவார்களா? மாட்டவே மாட்டார்கள்!" என்று சுலபமாகச் சொல்லிவிடலாம். நீட்டி முழக்கி இந்திய சட்ட சபையில் பேசியதாலும், வரவு செலவுத் திட்டத்தை நிராகரித்ததாலும் சுயராஜ்யம் வந்து விட்டதா? பின், என்னத்திற்காக வீண் சிரமம்?

அற்ப சந்தோஷம்

மேற்கண்ட குறிப்புகளை நாம் எழுதிய பிறகு இந்திய சர்க்காரின் ரயில்வே அங்கத்தினர் மிஸ்டர் பெந்தால் ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். இந்திய சட்ட சபையின் தீர்ப்பை ஒப்புக்கொண்டு, ரயில்வே கட்டணங்களை உயர்த்தும் யோசனையைக் கைவிட்டு விட்டதாகத் தெரிவித்திருக்கிறார். இதனால் நாம் மேலே எழுதியது எதையும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஏனெனில் வழக்கத்துக்கு விரோதமாகச் செய்திருக்கும் இந்தக் காரியம் பொதுவான வழக்கத்தை நன்கு ஊர்ஜிதப்படுத்துவதற்கே உபயோகமாகின்றது. ஆயினும், இந்திய சட்ட சபை அங்கத்தினர்கள், "பார்த்தீர்களா! இந்திய சட்ட சபைக்குப் போய் நாங்கள் சாதித்ததை!" என்று பீற்றிக் கொள்வதற்கும் மேற்படி சர்க்கார் தீர்மானம் உபயோகப்படும் என்பதில் சந்தேகமில்லை. நம்மில் அற்ப சந்தோஷிகள் அதிகம் உண்டு என்று தெரிந்துதான் சர்க்கார் இந்த முடிவு செய்திருக்கிறார்கள். ஏழு மாகாணங்களில் அரசாட்சியையும், சட்ட சபை மெஜாரிட்டிகளையும் கைவிட்டு விட்டு, ஆமதாபாத் முனிசிபாலிடியில் காங்கிரஸ் அபேட்சகர் ஜயித்துவிட்டது குறித்து அபார சந்தோஷப் படுகிறவர்கள் நம்மில் இருக்கிறார்கள் அல்லவா?

கல்கி

மலர் 3 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 26

என்ன சேதி?

கேலிக் கூத்து


இந்தியர்கள் சுதந்திர மில்லாத குறையை மறந்திருப்பதற்காக பிரிட்டிஷ் சர்க்கார் பல கேலிக் கூத்துக்களை நடத்தி வருகிறார்கள் அல்லவா? அவற்றி லெல்லாம் தலைமையான கேலிக் கூத்து புது டில்லியில் நடக்கும் இந்திய சட்டசபைக் கூத்தாகும். இந்த அழகான சபையின் ஆயுட்காலம் முடிந்து எத்தனையோ வருஷம் ஆகிவிட்டது. ஆயினும், அதற்கு இன்னும் உயிர் இருந்துவருவதாக ஒரு பாசாங்கு நடந்து வருகிறது. இந்தப் பாசாங்குக்கு உடந்தையா யிருந்து நடத்திவைக்கும் பெருமையில் அதன் அங்கத்தினர்களும் பங்கிட்டுக் கொண்டு வருகிறார்கள்.

எல்லாம் உண்டு; ஆனால்....

இந்திய சட்ட சபைக் கேலிக் கூத்தில் முக்கியமாகச் சிரிக்க வேண்டிய அம்சம் என்ன வென்றால், மற்றச் சுதந்திர நாடுகளில் உள்ள பார்லிமெண்டு சபைகளைப் போலவே இதற்கும் எல்லாச் சடங்குகளும் நடத்தப்பட்டு வருவதுதான். அக்கிராசனர், உப அக்கிராசனர், தீர்மானம், திருத்தப் பிரேரணை, வாதம், பிரதிவாதம், ஆட்சேபணை, சமாதானம், வோட்டு எடுத்தல், மணி அடித்தல் ஆகிய எல்லாச் சம்பிரமங்களும் உண்டு. சர்க்கார் வரவு செலவு மசோதா கொண்டு வருவது, ஒவ்வொரு இனமாகச் சட்ட சபையின் அநுமதி கோருவது, அங்கத்தினர் சில இனங்களை ஒப்புக் கொள்வது, சில இனங்களை மறுப்பது — ஆகிய எல்லா இழவுகளும் உண்டு. தேர்ந்தெடுத்த அங்கத்தினர்கள் வாய் கிழியப் பேசிச் சர்க்கார் அங்கத்தினர்களைத் தாக்கு தாக்கென்று தாக்குவதும், அவர்கள் பதிலுக்குத் தாக்குவதும் உண்டு. ஆனால், என்ன கிடையாதென்றால், இந்திய சட்டசபையின் முடிவுகளைச் சர்க்கார் ஒப்புக் கொள்வது என்பது மட்டுந்தான் கிடையாது! சர்க்காரின் முடிவுகளை அணுவளவாவது மாற்றுவதற்குக்கூட இந்திய சட்ட சபைக்கு அதிகாரம் கிடையாது. "நீங்கள் பாட்டுக்குக் குரைத்துக் கொண்டிருங்கள்; நாங்கள் பாட்டுக்குத் திருடிக்கொண்டு போகிறோம்" என்பது தான் நாளதுவரை இந்திய சர்க்காரின் கொள்கையாக இருந்து வருகிறது. ('குரைத்தல்' 'திருட்டு' இரண்டும் உவமையணிப் பிரயோகங்களாகும்.)

ஓர் உபயோகம்

மேற்படி இந்திய சட்டசபைக் கேலிக் கூத்தின் வருஷாந்திர வைபவம் இந்த வருஷமும் சம்பிரமமாக நடந்தது. இந்த வருஷத்தில் இந்திய சர்க்கார் மொத்தத்தில் பதினைந்து தடவை முறியடிக்கப் பட்டுப் படுதோல்வி யடைந்தனர்! இவற்றில் முக்கியமான தோல்வி, சர்க்கார் தரப்பில் ஆஜர் செய்த வரவு செலவுத் திட்டம் நிராகரிக்கப்பட்டதாகும். ஆனால், மேற்படி படுதோல்விகளினால் சர்க்காரின் காரியங்கள் எவ்விதத்திலும் குந்தகம் அடையப் போவதில்லை. "இந்திய சர்க்காரின் செலவுக்குக் காலணாக்கூடக் கொடுக்க முடியாது" என்று இந்திய சட்டசபை சொல்லிவிட்டது. ஆனால், இந்திய சர்க்காரோ 285 கோடி ரூபாய் வரி வசூல் செய்து 383 கோடி ரூபாய் செலவழிக்கத்தான் போகிறார்கள்! துண்டுவிழும் தொகைக்குக் கடனும் வாங்கப் போகிறார்கள்! "இந்திய சட்ட சபையில் நான் அங்கத்தினனா யிருந்து வருகிற ஐந்து வருஷ காலத்தில் இந்தச் சபையில் 200 தீர்மானங்கள் நிறைவேற்றி யிருக்கிறோம். அவை எல்லாம் குப்பைக் கூடைக்குத்தான் போயின!" என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் ஸ்ரீ புலாபாய் தேஸாய் எடுத்துக் காட்டினார். அந்த மாமூலுக்கு இந்த வருஷத்தில் பங்கம் வந்துவிடுமென்ற பயத்துக்குக் கொஞ்சமும் இடமில்லை. ஆனபோதிலும், சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவு


பக்ஷிராஜா பிலிம்ஸ்
ஜகதலப்ரதாபன்
புது வருஷ வெளியீடு
ஏப்ரல்
13
முதல்
சின்னப்பா, சரோஜினி, ஜீவரத்னம், வரலக்ஷ்மீ, சந்தானலக்ஷ்மி, ரங்காச்சாரி, கிருஷ்ணன்-மதுரம், பேபி கமலா நடிப்பது
டைரக்ஷன் : ஸ்ரீராமுலு நாயுடு.
நாராயணன்
கம்பெனி
வெளியீடு
J.E.11
P.G.M.Co

தெப்பக்குளம் ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி கோவில் கும்பாபிஷேக உதவிக்காக

ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸங்கீத ஸபை - திருச்சி

16-4-44 ஞாயிறு மாலை 5-25 மணிக்கு மலைக்கோவில் நூற்றுக்கால் மண்டபத்தில்

ஸ்ரீமதி என். ஸி. வஸந்தகோகிலம்

& பார்ட்டியாரின் சங்கீதக் கச்சேரி.

டிக்கெட் விபரம் :—ரூ. 2—8—0, 1—8—0, 0—12—0

S. G. RATNAM, Organiser

சென்னை மாகாண சிலோன் ஜவுளி ஏற்றுமதி வர்த்தகர்கள்

மதுரையில் பொதுக் கூட்டம்

சென்னை மகாணத்திலிருந்து சிலோனுக்கு ஜவுளி ஏற்றுமதி செய்யும் வர்த்தகர்களின் பொதுக் கூட்டம் 1944 ஏப்ரல் 9-ந்தேதி (பங்குனி கடைசி ஞாயிறு) மதுரையில் நடைபெறும். அவ்வமயம் சங்கம் நிறுவுவதுபற்றி முடிவு செய்யப்படும். கூட்டத்திற்கு ஏற்றுமதி வர்த்தகர்கள் அனைவரும் விஜயம் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

(ஒப்பம்) 1. கே. எஸ். பெருமாள் முதலியார், 2. வி. எஸ். சுப்பையா செட்டியார், 3. ஜே. கே. கந்தசாமி செட்டியார், 4. அப்துல் கனி சேட் (பனாரஸ் ஸ்டோர்) 5. எம். சென்னியப்ப முதலியார் சன்ஸ்.



சங்கீதக் கச்சேரி

சனிக்கிழமை 8—4—44 மாலை 5-30 மணிக்கு

மணக்கால் ஸ்ரீ ரங்கராஜன் - பாட்டு
கும்பகோணம் ஸ்ரீ ராஜமாணிக்கம்பிள்ளை - பிடில்
பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர் - மிருதங்கம்

மைலாப்பூர், ரஸிக ரஞ்ஜனி ஸபாவில்

டிக்கட் விபரம் :— ரூ. 5, 3, 2 & 1.

M. S. நடராஜய்யர், ஆர்கனைஸர்.

ஒரிஜினல் ரெங்கோன் எவரெடி எலெக்ட்ரிக் வைரங்கள்

ஆபரணங்கக் கற்களில் சிறந்தவை. எங்கள் வைரங்கள் அசல் வைரத்தைப்போல் பல வர்ணங்களுடன் பிரகாசிப்பவை. நீண்ட நாள் உழைப்பிற்கும் உறுதிக்கும் உத்திரவாதம்.

ஒரு முறை வாங்கி பரீக்ஷித்துப் பாருங்கள்

எல்லாவிதமான கலர் கற்களும் கிடைக்கும்.

T. C. வாசு பிள்ளை & பிரதர்ஸ்

எவரெடி வைர வியாபாரம்

திருவானைக்காவல் :: திருச்சினாப்பள்ளி.

கல்கி பொருளடக்கம்

மலர் 3
இதழ் 26


1944 ஏப்ரல் 9

சுபானு ஆ
பங்குனி 27

அரசியல்		
என்ன சேதி?	...	5
புலி வந்துவிட்டது!	...	10
இலக்கியம்		
எங்கே லக்ஷ்மி தேவி?	டி. கே. சி.	14
பீமன்	ராஜாஜி	18
படித்துப் பார்!	...	39
கதைகள்		
சிவகாமியின் சபதம்	கல்கி	21
நவம்பர் பத்தாந் தேதி	பகீரதன்	33
டைகர் எங்கே?	ஸோமாஸ்	33
அன்னம்மாளின் ஆனந்தம்	வஸந்தன்	40
கட்டுரைகள்		
ஐயா, கணக்கு வாத்தியாரே!	நாடோடி	34
மரத்துறை வைத்திநாதய்யர்	வைத்தியநாத பாகவதர்	45
பாப்பா மலர்	ராஜி	30
பல சரக்கு	...	44
ஆகாச வெடி	...	16
காலக்ஷேபம்	...	29
கார்ட்டூன்		
நிகழ்ச்சிச் சித்திரம்	உம்மன்	8



தமிழுக்கும் தமிழருக்கும் தமிழ் நாட்டுக்கும் நீண்ட காலமாக அருந் தொண்டு ஆற்றிவரும் யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் திருவுருவம் இம் முறை நமது இதழின் அட்டையை அலங்கரிக்கிறது. சுவாமிகள் பூர்வாசிரமத்தில் ஸ்ரீ வேங்கட சுப்ரமண்ய பாரதி என்ற நாமத்துடன் உயர்தரப் பள்ளியில் உபாத்திமைத் தொழில் புரிந்து வந்தார். துறவறம் மேற் கொண்ட பின்னர், ஸ்ரீ வ. வே. சு. ஐயரின் பிரசித்திபெற்ற சேரமா தேவி குருகுலத்தில் பணி ஆற்றினார். ஐயரின் அகால மரணத்தின் காரணமாகக் குருகுலம் மூடப் பெற்ற பிறகு, புதுச்சேரியில் ஸ்ரீ அரவிந்த யோகியின் ஆசிரமத்தில் சேர்ந்து மௌனத் தவம் இயற்றி வருவதுடன், தமிழ் மொழிக்கு அரும் பெரும் பணிகள் ஆற்றி வருகிறார். சுவாமிகள் இதுகாறும் எழுதியுள்ள 48 தமிழ் நூல்கள் அன்பு நிலையத்தாரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. சமீப காலத்தில் சுவாமிகள் பல அரிய தமிழ்க் கீர்த்தனங்களை இயற்றித் தமிழிசை இயக்கத்துக்குச் செய்திருக்கும் மகத்தான தொண்டு தமிழகம் நன்கு அறிந்ததாகும்.



திருப்தி, அமைதி
ஒரு கப் டீ அருந்தியவுடன்.
கேட்பானேன், நரஸூஸ் டீ
தான்! நல்ல காபி, டீயை
அனுபவிக்க அறிந்தவர்கள்
நரஸூஸ் காபி, டீயையே
விரும்புகிருர்கள்.
நரஸூஸ்
இந்தியத்தயாரிப்பில் தலைசிறந்தது
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
சேலம் தென்னிந்தியா
MNK-22-TM

புதிய கொலம்பியா ரிகார்டுகள்

Columbia Records
"MAGIC NOTES" TRADE MARK



சங்கீத வித்வான்

சித்தூர் சுப்ரமணிய பிள்ளை பாடிய

இனிய தமிழ்ப்பாட்டுகள்

GE. 6124
உன்னைச்சரண் (காம்போஜி)
ஹரஹர (சுபாஷிணி)



லலிதா வெங்கட்ராமன் பாடிய

GE. 6133 { மதுரையம்பதிவாழ்
அரியதரமாமோ....



ஸ்ரீ சாயிபாபா பாட்டுகள்

குமாரி மீனாக்ஷி பாடிய

GE. 6074 { நாம் விரும்பும்
பவக்கடலை

G.H.RAO

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்:

S. கண்ணன் & கம்பெனி, திருச்சிராப்பள்ளி.

M. A. ஹிருதயஸ்வாமி & கம்பெனி, உதகமண்டலம்.